# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 ஆகஸ்டு - 2000 இதழ் - 8



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன்; நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்..... சங்கீதம் 143:8

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-


*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

*தபால் பெட்டி எண் 27,*

*காங்கயம் -* 638 701. இந்தியா


குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | கருத்தரங்க அழைப்பிதல் | 09 |
| 3. | நீங்கள் கிறிஸ்தவன் என்ற பெயரில் மட்டும் இருக்க முடியுமா? | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | உபாகமம் ஒரு கண்ணோட்டம் | 19 |
| 7. | வெளிப்படுத்தின விசேஷம் | 20 |
| 8. | நீங்கள் ஆவிக்குரியவர்களா? | 26 |
| 9. | தெரிந்து கொள்ளுங்கள் | 28 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**


**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .13 August- 2000 Issue - 8**

*ஆசிரியவுரை*



மெய் மார்க்கமாகிய கிறிஸ்தவத்தில் நம்பிக்கையுள்ள நாமனைவரும், பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள எல்லா வசனங்களையும், அவை தேவனால்தான் கொடுக்கப்பட்டதென்று எவ்வித தயக்கமுமில்லாமல் ஏற்றுக்கொண்டு, அவைகளுக்கு சமமான மதிப்பளிக்கிறோம், ஆனால் அதே நேரத்தில், அவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற, எல்லோரையும் சம நோக்கில் பார்க்காமல் நாம் தவறிழைத்துக் கொண்டுள்ளோம். அதற்காக, வேத புத்தகத்தில் ஒருவனுடைய பெயர் வெறுமனே இடம் பெற்றிருக்கிறதென்பதற்காகவே,. ஒருவேளை, அதே வேத வசனங்களால் அவன் தூற்றப்பட்டிருந்தாலும், அவனை ஏற்றுப் போற்றவேண்டுமென்று நான் இங்கே கண்டிப்பாகச் சொல்லவில்லை. ஆனால் ஒருவன் தேவனால் சிறப்பானவனென்று அடையாளம் காட்டப்பட்டு, அவனுக்கு தேவ அங்கீகாரம் கிடைத்திருக்கிறதென்று, வசனங்களின் வழியாய் நமக்குத் திட்டமாகத் தெரியும்போது கூட, அப்படிப்பட்டவனை நாம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறோமல்லவா அதைத்தான் இங்கே சுட்டிக் காட்டுகிறேன். வேதாகமம் சிலருக்கு கொஞ்சம் கூடுதலான முக்கியத்துவம் தருகிறதென்கிற உங்கள் வாதத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்,பரிசுத்த எழுத்துக்களில் மெச்சப்பட்டிருக்கிற சிலரை சுத்தமாக ஒதுக்கி, அவர்கள் ஒருமுறை கூட பேசப்படுவதற்கோ அல்லது எழுதப்படுவதற்கோ லாயக்கற்றவர்கள் என்ற ரீதியில், கிறிஸ்தவம் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறதே, அந்த நிலையைத்தான் என்னால் அறவே ஜீரணிக்க முடியவில்லை.

இன்றைய கிறிஸ்தவத்தின் இச்செயல் என்னைக் கொஞ்சம் அதிகமாகவே பாதித்தபடியால் கடந்த ஆறு ஆண்டுகளாக, ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் இவர்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.ஆம், இன்றைய கிறிஸ்தவத்தால், இப்படி ஒதுக்கி ஓரங்கட்டப்பட்டு, கூனி குறுகி நிற்கிற இவர்களை வெளியே இழுத்து வந்து, நேரே நிமிர்த்தி, நெஞ்சை உயர்த்தி நிற்கும்படி செய்து, பாருங்கள், இவர்களின் கம்பீரமான தோற்றத்தை என்று உங்கள் கண்களுக்கு முன்பாக நிறுத்தினேன். நீங்களும் ஏற, இறங்கப் பார்த்து, நம்பமுடியாமல், மீண்டும் கண்களைக் கசக்கிப் பார்த்து, ஆஹா என்று அப்போது புகழ்ந்தீர்கள். ஆனால், இப்போது அவர்களை நீங்கள் சுத்தமாக மறந்திருக்க வாய்ப்புக்கள் வரம்பு மீறி இருப்பதால், அவர்களையெல்லாம் மீண்டும் ஒரு முறை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

அவர்கள், 1) வீரத்தின் விளைநிலமாய் வாழ்ந்த, நெஞ்சுரம் கொண்ட "சம்மா" (2.சாமு. 23:11,12) 2)இயேசுவின் ஊழிய நாட்களில் அவரை சத்தமிட்டுக் கூப்பிட்ட "பர்திமேயு" என்ற பார்வையற்ற மனிதன் (மாற்.10:46-58) 3)பவுலடியாரின் காலத்தில் இருந்த "ஒநேசிப்போரு" (2.தீமோ.1:16-18) 4)சமாரியாவிலுள்ள "சீகார் ஊரார்" (யோவா.4:1-30) 5) அப்போஸ்தலன் யோவானால் மெச்சப்பட்ட "காயு" (3.யோவா.1-6) மற்றும் 6)நமதாண்டவரால் திமிர்வாதக்காரன் சுகமாக்கப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட "நாலுபேர்" (மாற்கு 2:3)

இவர்களின் இச்சீர்மிகு வரிசையில் இடம்பிடித்து, உங்கள் உள்ளங்களைக் கொள்ளையிட இவ்வருடம் ஆயத்தமாயிருப்பவர் ஒரு புதிய ஏற்பாட்டுப்பாத்திரம். புதிய ஏற்பாட்டில் இடம் பெற்று, "தீ" யில் ஆரம்பிக்கும் பெயரைக் கொண்ட மற்றவர்களைப்போல, அதாவது தீமோத்தேயு மற்றும் தீத்து போல, இவர் பிரபலமானவரல்ல. இன்னும், அந்த இருவரின் பெயரில் நிருபங்கள் உள்ளதுபோல, இவர் பெயரில் நிருபம் எதுவுமில்லை. இருப்பினும், இவன் பற்றிய வேத வசனங்களை சற்று உற்று நோக்கின், அந்த இருவருக்கும் இவன் சற்றும் சளைத்தவனல்ல என்பது எல்லோருக்குமே பளிச்செனத் தெரியும். எப்படியெனில் மற்ற இருவரைப் போலவே இவனுக்கும் அப்போஸ்தலன் பவுலுடைய ஊழியத்தோடு போதுமான தொடர்பிருந்துள்ளது. ஒருவேளை, அவர்களிருவருக்கும், தனிப்பட்ட முறையில் நிருபம் எழுதினதைப்போல் இவனுக்கு எழுதவில்லை யென்பதும், அவர்களைப்போல இவனை உத்தமகுமாரன் என்று அழைக்கவில்லை யென்பதும் உண்மைதான். ஆயினும் இவன் பற்றிய பவுலின் வார்த்தைகளை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. ஒருவேளை இந்தத் தீகிக்குவையும் மற்ற இருவரைப்போல், அப்போஸ்தலன் பவுல் மனமாற்றி யிருக்க வாய்ப்பிருந்திருக்குமானால், இவனையும் கண்டிப்பாக "உத்தம குமாரன்" என்றே அழைத்திருப்பார்.

இவன் பற்றிய பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள். *அன்றியும் எனக்கடுத்த காரியங்களும், என் சுக செய்திகளும் உங்களுக்குத் தெரிய வரும்படிக்கு, அவைகளையெல்லாம் நமக்குப் பிரியமான சகோதரனும்*

*கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரனுமாயிருக்கிற தீகிக்கு உங்களுக்கு அறிவிப்பான்.* (எபே.6:21)

இந்தத் தீகிக்கு பற்றி, வேதாகமம், மிகக்குறைவான இடங்களில் மாத்திரம் குறிப்பிடுவதால் (அப்.20:4, கொலோ.4:7, 2தீமோ.4:12), நாம் விரும்புகின்ற அளவு இவன் பற்றிய பின்னணியைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கிறோம். அப்.20:4 லிருந்து, இவன் ஆசியா நாட்டைச் சேர்ந்தவன் என்றும்,அப்போஸ்தலன் பவுலின் எருசலேம் பயணத்தின் போது கூட இருந்துள்ளான் என்றும் தெரிகிறது. மேலும், எபே.6:21,22 மற்றும் கொலோ.4:7 வசனங்கள், இவன்,பவுலுடைய சிறை நிருபங்களை எடுத்துச் சென்றவன் என்று சொல்லுகிறபடியால், அப்போஸ்தலன் பவுல் ரோமச் சிறையிலிருக்கும்போது, கூட இருந்திருக்கிறான் என்றும் அறியலாம். இன்னும் ஒரு கட்டத்தில் தீத்துவுக்கு மாற்றாக, இந்த தீகிக்குவை அப்போஸ்தலன் பவுல் கருதும் அளவுக்கும் (தீத்.3:12) பவுல் மரிக்கும் தருவாயில், முக்கியமான வேலையாக அனுப்புவதற்கு, இவனைத் தெரிந்து கொள்ளுமளவுக்கும் இவன் நம்பிக்கைக்குரியவனாக வாழ்ந்துள்ளான் (2.தீமோ.4:12) என்றும் தெரிகிறது.

சரி, விசுவாசத்தில் உத்தம குமாரர்களாக இருந்த தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் இணையான ஒரு இடத்தைப் பெற்ற இந்தத் தீகிக்குவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளுவதற்கு சில பாடங்கள் கண்டிப்பாக இருப்பதால் அவை என்னவென்று பார்த்துப்பயனடைய் முயற்சிப்போம்.

## I.பிரியமான சகோதரன்

தீகிக்குவைக்குறித்து பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் முதல் நற்சான்று அவன் *பிரியமான சகோதரன்* என்பது.

நம்முடைய வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள*சகோதரன்* என்ற பதம் உன்னதமான பொருளை உடையது. உலகமானது, இவ்வார்த்தைக்கு கொடுக்கும் அர்த்தத்தைக் காட்டிலும் மேலான அர்த்தத்தைக் கொடுக்கிறது. உலகமானது ஒருதாய்மக்களை சகோதரன் என்றும், ஒரு மொழி பேசுகிறவர்களைச் சகோதரர்கள் என்றும், ஒரு ஜாதி அல்லது இனத்தைச் சேர்ந்தவர்களைச் சகோதரர்களென்றும் அல்லது ஒரு தேசத்தின் குடிகளைச் சகோதரர்களென்றும் சொல்கிறது. அதாவது, சகோதரன் என்ற வார்த்தைக்கு, சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் எல்லை வகுக்கப்படுகிறது. ஆனால், பரிசுத்த எழுத்துக்கள் கூறும் சகோதரன் என்ற பதம், இந்த எல்லைகளையெல்லாம் கடந்த பொருளையுடையது.

நமதாண்டவர் ஒருமுறை தம்முடைய சீஷரோடும், ஜனங்களோடும் உரையாடிக்கொண்டிருக்கும்போது, "*நீங்களோ, ரபீ என்றழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள்*

*எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்."* (மத்.23:8,9) என்றார். அதாவது, கிறிஸ்துவை விசுவாசித்து, பரலோகத்திலிருக்கிற *பிதாவின் சித்தம் செய்கிற எல்லோரும்* பரலோக தகப்பனுடைய பிள்ளைகளாய் இருக்கிறபடியால், ஒருவருக்கொருவர் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

இருப்பினும், இப்படி ஒரே ஆவியினாலே, ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, ஒரே ஆவிக்குள்ளாக தாகந்தீர்க்கப்பட்ட எல்லோரையும் பரிசுத்த ஆவியானவர் சகோதரர்கள் என அழைத்தாலும், பல இடங்களில் அவர்களின் தகுதியைத் தராசிலே நிறுத்தி, அதற்கேற்றாற் போன்று சிலரை " உண்மையுள்ள சகோதரன்" என்றும் (கொலோ.4:9) சிலரை " ஒழுங்கற்றுத்திரிகிற சகோதரன்" என்றும் (2.தெச.3:6) சிலரை "கள்ளச் சகோதரன்" (கலா.2:4) என்றும், சிலரை " பெலவீனமுள்ள சகோதரன் " (1.கொரி.8:11) என்றும் வகைப்படுத்திக் கூறுகிறது. ஆனால், இந்தத் தீகிக்குவின் காரியத்திலோ பரிசுத்த ஆவியானவர் பிரியமுள்ள சகோதரன் என்ற சிறப்பான வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

பிரியம் என்ற இந்தப் பொருள் பொதிந்த வார்த்தையை, விபரம் உள்ள ஒருவன், எல்லோருக்கும் பயன்படுத்தமாட்டான். இங்கே விபரமும், அறிவும், பரிசுத்த ஆவியின் நிறைவும் கொண்ட அப்போஸ்தலன் பவுல், நம்முடைய தீகிக்குவிற்கு, இரண்டு முறை (எபே.6:21, கொலோ.4:7) பயன்படுத்துவது, அவர்களிருவருக்கும் இருந்த நெருக்கத்தை நமக்கு நன்றாகவே உணர்த்துகிறது. இன்னும், எபேசியருக்கு எழுதும்போது, அப்போஸ்தலன் பவுல் எனக்குப் பிரியமான சகோதரன் என்று சொல்லாமல் நமக்குப் பிரியமான சகோதரன் என்று சொல்லுகிறார். அதாவது எபேசு ச்சபையார் அனைவருக்கும் இவன் பிரியமானவ்னாக வாழ்ந்துள்ளான். இன்னும் கொலேசே பட்டணத்துச் சபைக்கும் இவன் பிரியமானவனாகவே வாழ்ந்துள்ளரன் என்று தெரிகிறது. இப்படி அநேகருக்குப் பிரியமாய் இருப்பது ஒரு லேசான காரியம் என நினைக்கிறீர்களா?

இன்றைக்கு நம்முடைய சபைகளில் இருக்கிற சகோதரர்களின் நிலை எப்படியிருக்கிறது? நம்மில் எத்தனைபேர் சபையின் மூப்பர்களுக்கும், மூப்பர்களில்லாத பட்சத்தில், சபையின் சுவிசேஷ ஊழியருக்கும், இந்தத் தீகிக்கு போல, பிரியமாய் வாழ்ந்து கொண்டுள்ளோம்? இன்னும், எத்தனை பேர் சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் பிரியமாய், இந்த தீகிக்கு போல நடந்து கொண்டுள்ளோம்? குறைந்தபட்சம், எத்தனைபேர் எல்லாருக்கும் பிரியமாய் வாழ முயற்சியாதவது செய்துக்கொண்டுள்ளோம்? இன்றைக்கு பெரும்பாலான இடங்க்ளில் உள்ள அநேகர், சபையின் மூப்பர்களுக்கும், சுவிசேஷ ஊழியருக்கும் பலர் பிரியமாக நடந்து கொண்டு, சபையில் உள்ள சில அல்லது பல சகோதரர்களைப் பகையுணர்வோடு

பார்ப்பது நடந்து கொண்டிருக்கிறதா, இல்லையா? சொல்லுங்கள். ஞானி சாலமோன் சொல்லும்போது, "*இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்*" (நீதி.17:17) என்று கூறியுள்ளான். ஆனால், இன்றைக்கு சீர் குலைந்து போயிருக்கிற கிறிஸ்தவத்தையும், கிறிஸ்துவின் பெயரால் உள்ள பல சபைகளின் அவல நிலையையும் பார்த்தால் "*இடுக்கண் செய்யவே சகோதரன் பிறந்திருக்கிறான்*" என்று வசனத்தையே மாற்றி எழுதவேண்டும் போல் உள்ளது. நான் சொல்லும் இக்கருத்து உண்மைதான் என நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

ஆம், சகோதரர்களுக்குள்ளாகக் காணப்படும் பிரியமில்லாத நிலை, அந்தந்த பிராந்திய சபைகளைப் பாழ்படுத்துவதோடு, அந்தப் பிராந்தியங்களில் சபையின் மரியாதையையும் நாசமாக்கி விடுகிறது. இந்த நிலை, ஒரு சமுதாயத்தில், ஒரு சபையானது என்ன வேலையைச் செய்யவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறாரோ, அதைச் செய்ய முடியாதபடி, முடமாக்கிப்போடுகிறது. சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக இருக்க வேண்டிய சபை, இப்படி முடங்கிக் கிடப்பது, தேவன், இயேசுவை இந்த பூமிக்கு அனுப்பியதின் நோக்கத்தையும், அவர் தம் ரத்தத்தைச் சிந்தியநோக்கத்தையும் சிதைத்துப் போடுகிறது. ஆம், சகோதரர்களுக்குள்ளாக, பிரியமற்ற நிலை இருப்பது, எவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறதென்று பாருங்கள்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் தேவ சித்தத்தையும், இயேசு இரத்தம் சிந்தின நோக்கத்தையும் நிறைவேற்றவேண்டுமானால், தீகிக்கு போல, சத்தியத்தினடிப்படையில் எல்லோருக்கும் பிரியமாய் நடந்து கொள்ள வேண்டும்.

## II. உண்மையுள்ள ஊழியக்காரன்

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய தீகிக்குவிற்குக் கொடுக்கும் அடுத்த நற்சான்று, அவன், ***உண்மையுள்ள ஊழியக்காரன்*** என்பது.

நம்முடைய நாட்களிலுள்ள கிறிஸ்தவம், வேதாகமத்திலுள்ள பல வார்த்தைகளைத் தவறாகப் புரிந்திருப்பதைப்போல, ***ஊழியம்*** அல்லது ***ஊழியக்காரன்*** என்ற இவ்வார்த்தைகளையும் தவறாகவே புரிந்துள்ளது. எப்படியெனில், ஊழியம் என்றாலே ஒருவன் கையிலே வேதாகமத்தை எடுத்துக்கொண்டு, சிலநேரங்களில் தனது சொந்த குடும்பத்தைக் கூட கவனியாமல், ஊர் ஊராகச் சுற்றுவதும் அல்லது வேதவசனங்களைக் கூட்டிக் குறைத்து, எப்படியாவது ஒரு கூட்டத்தைக் கூட்டி, அக்கூட்டத்திற்கு அவ்வப்போதோ அல்லது வாராவாரமோ பிரசங்கம் செய்து அவர்கள் முன்னிலையில் தன்னை ஒரு விசேஷித்தவனாக காட்டிக்கொண்டு, காணிக்கை என்ற பெயரில், பல நூதன வழிகளின் மூலம் வசூல் செய்துகொண்டு சமுதாயத்தை வலம் வருவதும் தான் என்று நினைத்துக்

கொண்டுள்ளது. ஆனால்,இக்கருத்து முற்றிலும் தவறு என்பதற்கு வேதாகமம் நம்முடைய தீகிக்குவை, அசைக்கமுடியாத ஆதாரமாகக் காட்டுகிறது. இங்கே சொல்லப்படுகின்ற ஊழியம், சுவிசேஷ ஊழியத்திலிருந்து வேறுபட்ட ஒன்றாகவே சொல்லப்பட்டுள்ளது.

எப்படியெனில், எல்லாருக்கும் பிரியமான இந்தத் தீகிக்கு சம்பந்தப்பட்ட வசனங்களை நாம் துருவித் துருவிப் பார்த்தாலும், இந்த ***உண்மையுள்ள ஊழியக்காரன்*** யாருக்காவது பிரசங்கித்தான் என்று ஒரு தடயத்தையும் நாம் காணமுடியாது. ஆனால், தர்ம பணம் சேகரிக்கப்பட்ட பணியிலும், அதை எடுத்துச் சென்ற வேலையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளான்.(அப். 20:1-4). மற்றும் அப்போஸ்தலன் பவுல், சிறையிலிருந்து எழுதின நிருபங்களை, மற்ற பட்டணங்களில் இருந்த சபைகளுக்கு எடுத்துச்சென்ற பணியையும் செய்துள்ளான்.(கொலோ.4:7; எபே.6:21,22). இன்னும் இவன் அப்போஸ்தலன் பவுல், சிறையிலிருக்கும்போது, பல உதவிகளையும் ஒத்தாசைகளையும் நிச்சயமாகவே செய்திருப்பான். நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பூமியில் ஊழியம் செய்து கொண்டிருந்த நாட்களில்கூட ***அநேக ஸ்தீரிகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்தார்கள்*** என்று காண்கிறோம். (லூக்கா 8:3). அப்படியானால் இந்த ஸ்தீரிகள், இயேசுவுக்கு பிரசங்கம் செய்தார்கள் என்று சொல்லமுடியுமா? இல்லை.மாறாக, தங்களால் ஆன சேவையை இயேசுவுக்கு அவர்கள் செய்துள்ளார்கள் அவ்வளவுதான்.

கர்த்தருக்குள் அருமையானவர்களே, தேவனுக்குச் செய்யும் ஊழிய காரியத்திலும், நம்முடைய தீகிக்கு நமக்கு ஒரு நல்ல முன்மாதிரியாகவே உள்ளான். அநேகராகிய நாம் ஊழியமா, அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை; அதற்கென்று ஒருவர் இருக்கிறார் என்று நினைத்துக் கொள்கிறோம். ஒருவேளை, சுவிசேஷ ஊழியத்தைப் பொறுத்தளவில், நீங்கள் நினைப்பது, ஓரளவு உண்மையாக இருக்கலாம். ஆனால், கர்த்தருக்காகச் செய்யவேண்டிய பிற ஊழியங்களைப் பொறுத்தளவில் நம்முடைய நிலை என்ன? ஒருவேளை, நாம்நினைப்பது போல, தீகிக்கு நினைத்திருந்தால், எருசலேமில் ஏழைக்கிறிஸ்தவர்கள், பொருளாதார நன்மைகளைப் பெற்றிருக்க முடியுமா? எபேசு மற்றும் கொலோசே பட்டணங்களுக்கு நிருபங்கள் போய்ச் சேர்ந்திருக்குமா? சிறையிலிருந்த தேவமனிதனுக்கு நன்மைகள் கிடைத்திருக்குமா? சொல்லுங்கள்.

வாரத்திற்கு ஒருமுறை ஆராதனைக்குப்போவதே, ஒரு பெரிய சாதனை என்ற நமது நினைப்பை நாம் அடியோடு மாற்றி, இந்த தீகிக்கு போல கர்த்தருடைய் காரியத்திலும், கர்த்தருடைய சபைக்கடுத்த காரியத்திலும், கர்த்தருடைய சகோதரர்களுக்கடுத்த காரியத்திலும் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வோமாக!

## III. விசுவாசத்தில் உறுதிகாட்டின சகோதரன்

நம்முடைய தீகிக்குவைக் குறித்து நாம் தெரிந்த கொள்ள வேண்டிய மற்றொரு காரியம், அவனுடைய விசுவாச உறுதி. வேத வசனங்கள் இது குறித்து நேரிடையாகக் குறிப்பிடாவிட்டாலும், வெளிப்படுத்தப் பட்டிருக்கும் சான்றுகளை வைத்து இந்த உண்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆம், அப்போஸ்தலன் பவுல், ரோமச் சிறைச்சாலையில், மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் சந்திக்கலாம் என்ற நிலையில் உள்ளார். ஏனென்றால் *"நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது"* (2.தீமோ.4:10) என்று கூறுகிறார். இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில், அப்போஸ் தலனாகிய பவுலோடு கூட இருந்து அவனுக்கு உதவிசெய்ய வேண்டியவர்கள் குறிப்பாக தேமா போன்றவர்கள், இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, அவனைவிட்டு பிரிந்துபோய்விட்டார்கள் (2.தீமோ.4:10) ஆனால், இந்த இக்கட்டான நிலையிலும், தீகிக்கு, அப்போஸ்தலன் பவுலுடன் இருந்துள்ளான் என்று தெரிகிறது. எப்படியெனில், பவுல் அப்போஸ்தலன் மீண்டும் இவனை எபேசுவுக்கு அனுப்புகிறார். என்ன காரணத்திற்காக அனுப்பினார் என்று நமக்கு சொல்லப்படவில்லை. ஆனால், எபேசுபட்டணத்துச் சபையார், தான் மரிப்பதற்குள்ளாக, சில காரியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பி, அதற்குச் சரியான நபர் தேவைப்பட்டபோது, தெரிந்து கொள்ளப்பட்டவன் இந்த தீகிக்குதான். (2தீமோ.4:12) தீமோத்தேயு, தீத்து போல, தான் விசுவாசத்தில் பெற்றெடுக்கப்படாத குமாரனாக இல்லாதபோதும், அப்போஸ்தலன் பவுலின் இறுதிநாட்களில் அவனோடு கூட இருந்து, அவன் இட்ட கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தான்.

யூதாஸ் காரியோத்தின் துரோகத்தினாலே, இயேசுவானவர் காட்டிக்கொடுக்கப்பட்டு, பிடிபட்டவுடன், ***அவருடைய சீஷர்கள் எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள்*** என்று நாம் வாசிக்கிறோம். (மாற்கு 14:50) இப்படி, ***இனி அவ்வளவுதான்*** என்ற ஒரு நிலைவரும்போது, பின்வாங்குவதும், விட்டுவிட்டு ஓடுவதும் மனிதர்களுக்கிருக்கும் பொதுவான குணம். ஆனால், நம்முடைய தீகிக்கு, தான் நேசித்த தேவ மனிதனாகிய பவுலுக்கு, ***மரணம் உறுதி*** என்ற நிலைவந்தபோதும், பலகாலம் கூட இருந்த தேமா போன்றவர்கள் பின்வாங்கிப் போனபோதும், கலங்காமல் சோர்வடையாமல், தடுமாறாமல், தன்னுடைய விசுவாச நிலையில் உறுதிகாட்டி பவுலுக்குப் பணிவிடை செய்ததோடல்லாமல், அந்த இக்கட்டான நேரத்திலும் அவன் இட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, எபேசுவுக்கு இரண்டாம் முறை பயணம் மேற்கொண்டான். நம்முடைய விசுவாச உறுதி, இந்த தீகிக்கு போல் உள்ளதா? அல்லது ஓடிப்போன சீடர்கள் போல் உள்ளதா? சிந்திப்போம்.

இன்னும், நம்முடைய தீகிக்குவினுடைய விசுவாச உறுதியானது, தன்னை எப்பொழுதும் தேவ காரியங்களுக்கு ஒப்புக்கொடுக்கும்படி செய்துள்ளது. பவுலடியார், தீத்துவுக்கு எழுதின நிருபத்திலிருந்து நாம் இதைத் தெரிந்து கொள்ளலாம்.எப்படியெனில் "*நான் அர்த்தெமாவையாவது, தீகிக்குவையாவது உன்னிடத்தில் அனுப்பும்போது நீ நிக்கப்போலிக்கு என்னிடத்தில் வர ஜாக்கிரரைப்படு.,.* " (தீத்து.3:12) என்று கூறியுள்ளார்.இவ்வசனத்தில், அப்போஸ்தலன் பவுலுடைய வார்த்தையின்படி அனுப்புமிடமெங்கும் போவதற்கு எப்பொழுதும் ஆயத்தமுள்ளவனாக இருந்தான் என்ற உண்மை மாத்திரம் வெளிப்படாமல், வேறொரு உண்மையும் மறைந்திருக்கிறது. அதாவது, தீத்துவை, என்ன வேலையாக பவுல் விட்டுவந்தாரோ, அந்த வேலையை இந்த*த்தீகிக்கு போனாலும் செய்யமுடியும்* என்பது. ஆக, வேத அறிவும், ஆற்றலும், அனுபவமும் கொண்ட தீத்துவுக்கு மாற்றாக, இங்கே தீகிக்கு குறிப்பிடப் பட்டிருக்கிறார் என்பதை நாம் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது. ஓரமாக ஒதுங்கியிருந்தாலும், எவ்வளவு பெரிய மனிதனாக இந்த தீகிக்கு இருந்துள்ளான் பாருங்கள்.

ஆகையால்,நாமும் நம்முடைய விசுவாசத்தில், எந்தச் சூழ்நிலையிலும் உறுதியுள்ளவர்களாகவும், எந்நிலையிலும் தேவ காரியங்களுக்கு நம்மை, ஒப்புக்கொடுப்பவர் களாகவும் இருக்கவேண்டும்.

என் அன்பிற்குரிய வாசகப்பெருமக்களே! இவ்வருடமும், நம்மால் மறக்கப்பட்ட, ஒரு மிகச்சிறந்த கிறிஸ்தவனை,பரலோகத்தின் தேவன் தமது வசனங்களைக் கொண்டு அடையாளம் காட்டியுள்ளார். இவன், நம்மிடமுள்ள சில குறைகளைக் களைந்து போடுவதற்கேற்ற, மூன்று முக்கியமான பாடங்களை நமக்குக் கற்றுக்கொடுத்துள்ளான். அவைகளின் படி நாம் ஒவ்வொருவரும் பிரியமுள்ள சகோர்தரர்களாகவும், உண்மையுள்ள ஊழியக்காரர்களாகவும், விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாகவும் வாழ்வோமாக!

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிக்கட்டும்! ஆமென்.

செ. ராஜநாயகம்



ஜெபியுங்கள்! திட்டமிடுங்கள்! பங்குபெறுங்கள்!

# காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும்
# உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்
# இணைந்து நடத்தும்

# மூன்றாம் வேதாகம கருத்தரங்கம்

**நாள் :** *அக்டோபர் 6,7 - 2000*
*வெள்ளி, சனி (அரசு விடுமுறை நாட்கள்)*

**நேரம் :** *தினமும் காலை 9:30 மணி முதல் 12:30 மணிவரை*
*மாலை 2:00 மணி முதல் 5:00 மணிவரை*

**இடம் :** கிறிஸ்துவின் சபை வளாகம்
*தாராபுரம் ரோடு*
*காங்கேயம் - 638 701.*

**பேச்சாளர்கள் : தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும் தேவ தாசர்கள்**

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்

**பதிவுக் கட்டணம் ரூ.20/- மட்டுமே**

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.
(இவ்வருடம் கூடுதல் வசதி செய்யப்பட்டுள்ளது)

---

தொடர்பு முகவரி:-

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.
போன்: 04257 - 20030

# நீங்கள் கிறிஸ்தவன் என்ற பெயரில் மட்டும் இருக்க முடியுமா?

மார்க்க ரீதியாக பிளவுபட்ட உலகில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். நூற்றுக்கணக்கான சபைகளும் ஆயிரக்கணக்கான நாமங்களும், பட்டங்களும் வழங்கி வருகின்றன. இது கிறிஸ்துவினிமித்தம் உதவியாயிருப்பதற்குப் பதிலாக, அதிகப்பட்சமானோர் மீது எதிர்பாராத ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மக்களிடையே பொதுவான குழப்பங்களும் தங்கள் பக்தியையே முழுமையாக விட்டு விட ஏதுவான சோர்வும் காணுகிறது. ஆனால் இதுதான் நிவாரணமா? நிச்சயமாக அப்படியில்லை, வேறு சிறந்த வழி இருக்கத்தான் செய்கிறது.

வெறும் கிறிஸ்தவன் என்ற பெயரில் மாத்திரம் நீங்கள் அழைக்கப்பட முடியும் என்பதை அறிவீர்களா? அது சரி. உண்மையில் நீங்களானாலும், வேறு யாரானாலும், கிறிஸ்தவராக ***கிறிஸ்தவன்*** என்று மட்டும் பெயர் பெற்றவராக இருக்க இயலும். கிறிஸ்துவின் நாமத்தை மாத்திரம் உங்களால் தரித்துக் கொள்ள இயலும்போது, மனிதனின் பெயர்களையும், பட்டங்களையும், நீங்கள் ஏன் தரித்துக் கொள்ளவேண்டும் வேதம் உங்களை கிறிஸ்தவனாக மட்டுமே மாற்றும்.

புதிய ஏற்பாட்டு மக்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரமே இருந்தனர். உதாரணமாக "***அந்தியோகியாவிலே சீஷர்கள் முதன் முதலில் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர்***" (அப்.11:26) இன்று நமது நாளில் இதற்கொப்பான எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக இருக்ககூடும்? மறுபடியும் பவுல் அக்கிரிப்பா இராஜாவினிடத்திலே பிரசங்கிக்கும்போது, என்னை "***நீ கொஞ்சங்குறை கிறிஸ்தவனாக சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்று இராஜா சொன்னதாக வாசிக்கிறோம்***". (அப்.26:28) கர்த்தருடைய உபதேசத்திற்கு கீழ்படிந்தால் தான் கிறிஸ்தவனாக முடியும் என்று அவனுக்கு எப்படி தெரிந்திருந்தது. மற்றவர்களை கிறிஸ்தவனாக மாற்றியது எதுவென அவன் அறிந்திருக்கக்கூடும், அல்லது அவனுக்கு குறிப்பாகப் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். எப்படி எடுத்துக்கொண்டாலும், தான் கிறிஸ்தவனாக மாற, கிறிஸ்துவுக்கு கீழ்படிய வேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். இறுதியாக பேதுரு எழுதும்போது ஒருவன் கிறிஸ்தவனயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.(1.பேதுரு.4:16). மற்றொரு மொழி பெயர்ப்பில்

*இந்த நாமத்தினாலே* அல்லது *கிறிஸ்தவன்* என்ற நாமத்தினாலே தேவனை மகிமைப்படுத்தக்கடவன் என்று சொல்லபட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் கிறிஸ்தவன் என்ற பதம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் கிறிஸ்துவுக்கு கீழ்படிந்த ஒரு தனிப்பட்டவனையோ, தனிப்பட்டவர்களையோ குறிப்பதாக அமைந்துள்ளது, அல்லது ஒருவன் கிறிஸ்தவனாக மாற கர்த்தருக்கு கீழ்ப் படிதலைக் குறிக்கிறது. கிறிஸ்தவன் என்னும் பதத்திற்கு கிறிஸ்துவைப் போலிருத்தல் அல்லது கிறிஸ்துவின் ஆவியை உடையவனாயிருத்தல் என்று பொருள், ஒருவன் எப்படி கர்த்தருக்கு கீழ்ப்படியாமலேயே அவருடைய நாமத்தைத் தரித்துக் கொள்ளக்கூடும்? ஒருவர் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொள்ளாமல், மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயரை வைத்துக்கொண்டு, எப்படி கிறிஸ்துவைப்போல் இருக்க முடியும்? நிச்சயமாக அது முடியாதது.

பெயரில் (நாமத்தில்) ஒன்றுமில்லை என்று சிலர் கூறக்கூடும். ஆகிலும் கிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமே இரட்சிப்பு இருக்கிறது என்று வசனம் சொல்லுகிறது.(அப்.4:12) அதே வேளையில் வேறுஎந்த நாமத்திலும் இரட்சிப்பு இல்லை. 1.கொரி. 1-ம் அதிகாரத்தில் கொரிந்து பட்டணத்தில் இருந்த சில அங்கத்தினர்கள் தங்களைப் பவுலைச் சார்ந்தவனென்றும், அப்பொல்லோவை சார்ந்தவனென்றும் கேபாவை சார்ந்தவனென்றும், கிறிஸ்துவை சார்ந்தவனென்றும் கூறிப் பிரிந்திருந்தனர். பவுல் இதைக்குறித்து அவர்களைப் புகழாமல் அவர்களை கண்டனம் பண்ணுகிறார்." *சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தை பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்க வேண்டுமென்று, தம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்தவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.*" (1.கொரி.1:10), என்று கூறினார். பிறகு அவர்கள் அறிவீனத்தை சுட்டிக்காட்டும் பொருட்டு, "*கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று கேட்கிறார்*" (1.கொரி.1:13) கிறிஸ்து ஒருவரே என்பதும், கிறிஸ்து அவர்களுக்காக சிலுவைலறைப்பட்டார் என்பதையும், கிறிஸ்துவின் நாமத்தினாலா இவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்பதையும் அவர்கள் அறிவார்கள். எனவே மனித பெயர்களல்லாமல், கிறிஸ்துவின் நாமத்தை மாத்திரமே தரித்துக்கொள்ளவேண்டும், என்ற முடிவுக்கு வருகிறோம். அதுவே இன்றைக்கு உண்மையானது.

வேதத்தில் குறிப்பிடாத பெயர்களையோ, பட்டங்களையோ நீங்கள் தரித்துக் கொண்டிருந்தால், வேதத்தின் போதனைப்படி, நீங்கள் கிறிஸ்தவரல்ல. சிலபேர் விஷயத்தில், வேதத்திலிருந்து குறிப்பிடப்படுகின்ற பெயரையோ தரித்துக் கொண்டிருப்பதாக கூறப்பட்டாலும், கர்த்தர்

உங்களையோ, பிறரையே தரித்துக்கொள்ளும்படி கூறப்படாத பெயராக அது இருப்பின், நீங்கள் தவறாக அந்த பெயரைத் தரித்து கொண்டுடிருக்கிறீர்கள் என்றுதான் பொருள். நீங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று .வேதம் கூறுவதற்கு அப்பால், (இன்ன சபைக்கிறிஸ்தவன் ஏன்று) *கிறிஸ்தவன்* என்பதற்கு முன்னோ பின்னோ பயன்படுத்தினால், கர்த்தருடைய நாமத்தை நீங்கள் வீணாகப் பயன்படுத்துகிறபடியால், நீங்கள் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. ஏதோ ஒரு குழுவைச் சார்ந்த கிறிஸ்தவனாக இருந்துகொண்டு, வேதத்தின்படியான கிறிஸ்தவனாக நீங்கள் இருக்க முடியாது. ஒன்று நீங்கள் வேத்தின் படியான கிறிஸ்தவனாக இருக்கவேண்டும். அல்லது கிறிஸ்தவனாகவே இல்லாதிருக்க வேண்டும். வேதத்தை முறையாக வாசித்து, கற்றறிந்து, அது என்ன சொல்லுகிறதோ அதை மாத்திரம் செய்யும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம். நீங்கள் அப்படிச் செய்வீர்களானால்,நீங்கள் எப்படிப்பட்ட கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்பதையும் கிறிஸ்தவன் என்ற பதத்திற்கு அப்பால், கூட்டியோ குறைத்தோ பெயர் தரிக்காமல் கிறிஸ்தவன் என்று மாத்திரம் பெயர் தரித்துக்கொள்வீர்கள். அதுபோதுமானதல்லவா?கிறிஸ்தவன் என்னும் பதத்திற்கு அப்பால் கூட்டியோ, குறைத்தோ ஏன் இருக்கவேண்டும்?. நீங்கள் கர்த்தரைக் குறித்து கேள்விப்பட்டு, (ரோமர்.10:17) தேவனை விசுவாசித்து, (எபி.11:6), உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி(அப்.17:30) கிறிஸ்துவை அறிக்கையிட்டு (மத்.10:32) பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பண்ணபட வேண்டும். (அப்.2:38; மாற்கு.16:16) அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சிப்பார், நீங்கள் கிறிஸ்தவன் என்று மாத்திரம் அழைக்கப்படுவீர்கள். அந்தக் கீழ்ப்படிதல்,நீங்கள் வேதத்தில் வாசிக்கிற ஒரே ஒரு சபையில் உங்களை அங்கமாக்குகிறது (அப்.2:47; மத்.16:18; ரோமர்.16:16).

கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருப்பீர்களானால், நீங்கள் கிறிஸ்தவன் என்று மாத்திரம் அழைக்கப்படுவீர்களானால், நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்கள் என்று பொருள்படும். அப்பொழுது நீங்கள் கிறிஸ்துவின் பெயரைத்தரித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்றும், கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருக்கிறீர்கள் என்றும் பெருமையுடன் உறுதியாகச் சொல்லி கொள்ள இயலும். இதன்பொருள்,நீங்கள் நாமகரணக் கூட்டத்தைச் சார்ந்தவரல்ல, மனிதனுடைய உபதேசங்களை நீங்கள் பின்பற்றுபவர்களல்ல, ஆனால் நீங்கள் தரித்துக்கொண்டிருக்கும் பெயரை வசன ஆதாரத்துடன் நிரூபித்துக் காட்டி, மார்க்கம் என்னும் பெயரில் நீங்கள் செயல்படும் அனைத்துக் காரியங்களும், அவரது சபையில் நீங்கள் அங்கமாயிருப்பதை. பொருள்படச் செய்யும். அப்பொழுது பவுல் ஏன் இப்படி எழுதினார் என்பதை புரிந்து கொண்டு நீங்கள் சந்தோஷப்பட இயலும்,பவுல் கூறியதாவது, "*வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதை எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்.*" (கொலே.3:17)

J.C. சோட்

*பெண்கள் பகுதி*

# பெண்களின் பங்கு என்ன?

மனித சிருஷ்டிப்பில் சரிபாதியிடத்தை பெண்ணானவள் பெற்றதிலிருந்து, அவள் முக்கியமானவளென்பதும் வாழ்க்கையில் அவள் பங்கு முக்கியமானதென்பதும் தெளிவாகத் தெரிகிறது. தேவன் சில பொறுப்புகளை மனிதனுக்கும், மற்ற பொறுப்புகளை பெண்களுக்கு கொடுத்துள்ளார். இருவரும் தங்கள் வேலையை சரிவரச் செய்தால், நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும், அதோடு எல்லா காரியங்களும் நிறைவேறும், எதுவுமே துன்பப்படவேண்டியதில்லை. இதில் ஆணோ, பெண்ணோ தங்களுக்கு குறிக்கப்பட்ட வேலையை நிராகரித்துவிட்டு அதற்குப் பதிலாக மற்றவர்களின் வேலையில் குறுக்கிட்டு அவர்களுடைய வேலையை செய்ய முற்படும்போது, அங்கே பிரச்சினை வருகிறது.

தேவனுக்கு முன்பாக பெண்களுக்கென்று நான்கு வகையான பொறுப்புகள் உள்ளன.

1. திருமணத்தில் 2. வீட்டில் 3. சபையில் 4. சமுதாயத்தில். இதில் ஏதாவதொன்றில் பெண்கள் தங்கள் வேலையை செய்யாமல் விட்டு விட்டால் எல்லோரும் துன்பப்படவேண்டிய அவசியம் நேரிடும். இம்மாதம் திருமணத்தில் அவளுடைய பங்கு என்ன என்பது பற்றிப் பார்ப்போம்.

## திருமணத்தில்

புருஷனானவன் தன் மனைவிக்கு தலைவனாயிருந்து, அவளுக்கு வேண்டியவைகளைச் செய்து, அவளைப் பாதுகாக்கும் பொறுப்பை பெற்றுள்ளான். எபேசியர். 5:25,28,29 வசனங்களில் "*புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார். அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்புகூரவேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்*".

தேவனால் கொடுக்கப்பட்ட இந்த தலைமைத்துவமானது கணவன் தன் மனைவி மீது அதிகாரம் செலுத்தி கொடூரமாக அவமரியாதை செய்வதற்காக அல்ல. சில ஆண்கள் எப்போதெல்லாம் கோபப்படு கிறார்களோ அப்போதெல்லாம் மனைவிகளை அடிக்கிறார்கள். சிலர் தங்களுடைய மனைவியை அடிமைகளைப் போல் நடத்துகிறார்கள். அவர்களிடமிருந்து முடிந்தளவு வேலையையும், உதவியையும் பெற்றுக்

கொண்டு அவர்களுடைய சந்தோஷத்திலோ, சுகத்திலோ சிறிதும் அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள். சிலர் தங்கள் மனைவிகளை மதிப்பில்லாமல் பேசி அவர்களைச் சிறுமைப்படுத்தி, தங்களை ஏதோ முட்டாள்களென்றும், ஒன்றுமறியாதவர்களென்றும், அறிவில்லாதவர்கள் என்றும் அவர்களை எண்ணவைத்து, அவர்களுடைய யோசனைகள் எந்தவகையிலும் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட தகுதியற்றது என்றும் நினைக்கும்படிச் செய்கின்றனர். அவர்களுடைய நடத்தையை அவர்கள் எவ்வாறு நியாயப்படுத்துகிறார்கள் என்றால், தாங்கள் ஆண்கள் என்ற அடிப்படையிலும், தேவன் அவர்களை பெண்களை ஆளுகை செய்வதற்கே படைத்துள்ளார் என்றும் சொல்லுகிறார்கள். எப்படியிருப்பினும் அவர்களுடைய இந்த நடத்தையும், இந்த காரணங்களும் தேவன் திட்டமிட்டிருந்த கிறிஸ்தவ ஆண்களுக்குரிய தகுதியாக இல்லை. இப்படி அவர்கள் செய்வது, பாவமும் தவறான செயலுமாகும். மேலும் இது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சூழ்நிலை வரும்போது பெண்கள் பாவமான செயலை செய்ய தூண்டுகிறது.

எந்த ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கும் தன்னை தன் கணவனிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் ஒருபோதும் அவசியம் வரக்கூடாது. என்றைக்காவது சபையானது தன்னை கிறிஸ்துவிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்று நினைக்குமா? கிறிஸ்தவக் கணவன்மார்கள் தங்களுடைய அன்பு, தலைமைத்துவம் ஆகிய இவற்றை கிறிஸ்துவைப் பார்த்து அமைத்துக்கொள்ள வேண்டும்.

பெண்களுடைய பங்கு என்னவென்றால் அவள் தன் கணவனுக்கு மரியாதை கொடுத்து, அவனின் தலைமைதுவத்தை மதித்துக் கீழ்ப்படிய வேண்டும். அவள், அவனுடைய சரீர, உணர்வுப்பூர்வமான, மற்றும் பாலியல் தேவைகளைப் பூர்த்திசெய்கிறவளாக இருக்கவேண்டும். அப்படிச் செய்யும் போது அவன் வாழ்க்கையின் இந்த காரியங்களில் வேறு இடம் தேடிச் செல்லும்படியான சோதனைக்குட்படவே மாட்டான். இதைப்பற்றி பவுல் கூறும்போது, "*ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கும் அவனவன் தன் சொந்த மனைவியையும் அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். புருஷன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன் அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல; மனைவியே அதற்கு அதிகாரி. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையியிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்.*" (1.கொரி.7:2- 5).

கணவன் எதில் குறைவுபட்டு காணப்படுகிறானோ அதை நிவர்த்தி செய்யும் உதவிக்காரியாக மனைவி இருக்கவேண்டும். சில நேரங்களில்

தலைமை தாங்கி நடத்தக்கூடிய பொறுப்பில் பெலம் இழந்து கணவன் காணப்படும்பொழுது மனைவியானவள் அவனைத் தேற்றிக் குடும்பத்தின் தலைவராக இருப்பதற்கு அவனுக்கு உதவிசெய்யவேண்டும். அதைவிட்டு விட்டு அவனை ஒருபுறம் ஒதுக்கித்தள்ளி தானே அந்த தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

எல்லோருக்கும் எல்லாம் தெரியாது, அதுபோல எல்லாவற்றுக்கும் பதிலும் தெரியாது. மனைவி எந்தெந்தக் காரியங்களில் தெளிவான அறிவுடையவளாயிருக்கிறாளோ அது, காரியங்களைக் கலந்துபேசவும், கணவன் மற்றும் மனைவியின் ஞானத்தோடு காரியங்களைச் சிந்திக்கவும், யோசித்து•முடிவெடுக்கும் போது தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபிப்பதிலும் மிகவும் பிரயோஜனமாயிருக்கும். இதையெல்லாம் வைத்துப்பார்க்கும்பொழுது,முடிவெடிக்கும் பொறுப்பு கணவனைச் சார்ந்தது என்று தெளிவாய் தெரிகிறது. கணவனின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு, பிறகு அவனோடு கூடச்சேர்ந்து, அந்தக் காரியங்களைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு மனைவியை சார்ந்தது. ஏனென்றால் இந்த வகையான அதிகாரங்கள் தேவனுடைய சட்டமாகக் கொடுக்கப்பட்டபடியால், வேதத்தின்படி நாம் முடிவுகளை எடுக்கும் போது அவர் நம்முடைய தீர்மானங்களை ஆசீர்வதிக்கிறார்.

சில நேரங்களில், வேறுப்பட்ட பின்னணி காரணமாக அல்லது வித்தியாசமான அளவிலான திறமையின் காரணமாக, கணவன் ஒருவேளை உடை உடுத்துவது பற்றி அதிக அநுபவிமில்லாமல் இருக்காலாம், அல்லது பேச்சு, பழக்கவழக்கங்கள், நாகரீகம், வேதஅறிவு, அல்லது எந்த ஒரு காரியத்திலும் மனைவியை விட சற்றுக் குறைந்த அறிவுள்ளனாயிருக்கலாம். அல்லது மனைவி இப்படி குறைகளோடு இருக்கலாம். எவுராயிருந்தாலும், எந்த வகையில் பெலவீனமாய் இருக்கிறார்களோ அதில் ஒருவருக்கொருவர் உதவியாய் இருக்கும்போது இருவரும் நல்ல பொருத்தமுள்ளவர்களாய் இருக்க முடியும். ஒரு கல்வியறிவு பெற்ற மனிதன் கல்லாத பெண்ணை விவாகம் செய்யும்போது, அவளை தன்னுடைய கல்வித்தரத்திற்கு முடிந்தளவு முயற்சித்துக் கொண்டுவராதவரை, நிஜமாகவே தன்னையும், தன் முழு குடும்பத்தின் வளர்ச்சியையும் ஒர் எல்லைக்குள்தான் வைத்துக் கொள்ளமுடியும்.

மனைவியானவள் தன் கணவன் ஏதாவதொரு வகையில் குறைவுள்ளவானயிருப்பதைக் கண்டால் அவன் அதில் வளர்ந்தேறுவதற்கு உதவிசெய்யவேண்டும். அவனைக் கட்டளையிடுவதாலேயோ அல்லது சிறுமைப்படுத்தவதாலேயோ, வெளிப்படையாக சரிசெய்வதாலேயோ அல்ல,மாறாக பொறுமையாய் உதவி செய்யவேண்டும். சாந்தத்தோடும், உதவிசெய்யும் மனதோடும் அமைதலாக அவனை தேறச் செய்து, தைரியப்படுத்தி, மேம்பாடு அடையச் செய்யவேண்டும்.

தொடரும்.....

பெட்டிசோட் ரேச்சல் இராஜநாயகம்.

வாலிபர் பகுதி

# நுகம் சுமப்போம்

வாலிபம் என்றாலே சுமைகள் இல்லாத சுகிர்தங்கள் மிகுந்த சுகமான வாழ்வாய் இருப்பதோடல்லாமல் இனிதான இந்த இளமை என்றும் தங்களுடன் நிலைத்தால் அளப்பில்லா களிப்படைவோமே என ஏங்கித் தவிப்பர் தரணியில் பலர் இருக்கிற போதிலும், உடல் வலிமை நலிந்து, தோல் சுருங்கி, கெம்பீரமாய் கிளம்பிவரும் கதிரவனைக் காணக்கூடாமல் கிழவனாய் கண்மங்கி, நரைபூத்து நாழிகையை எண்ணும் நாட்களிலும், இளமை நம்மோடு இணைந்திருக்க அது முகம்விட்டு அகம் புகுந்து அடைக்கலமாகவேண்டுமென உணர்வோர் சிலர்தான், சுடு நெருப்பில் புடம் போடப்போடத்தான் நல்ல தங்கம் கிடைக்கும் என அறிந்த நாம், நம் வாழ்க்கையிலும் நம் பொறுப்புச்சுமைகளை நிறைவேற்ற இடையூறுகள் வரும்பொழுது ஈடுகொடுத்து, வயோதிகத்திலும் வாலிபத்தை உள்ளத்தில் பெற்றவர்களாய் இருந்திடல் வேண்டும்.

வையத்தின் மையத்தில் வைக்கப்பட்ட சமாதான சீமையான எருசலேம் சிங்காரமிழந்து தரிகெட்ட தருக்கர் கையில் சிறைப்பட்டு போன செய்தி கேட்டு பட்டுப்போன மலர்போல துவண்டு புலம்பிய எரேமியா வாலிபர்களாகிய நமக்கு நல்லாலோசனை சொல்வதைக் கவனியுங்கள். ***"தன் இளம்பிரயாயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது"*** (புலம்பல்.3:27)என்கிறார். அநேகர் இன்று நினைப்பதற்கு மாறாக இளைஞர்கள் நுகம் என்னும் பொறுப்புக்களைச் சுமப்பது நல்லது என்று வலியுறுத்துகிறார் தீர்க்கனான எரேமியா. கர்த்தருடைய வார்த்தை குறைவற்றதாயிருப்பதால் இதிலுள்ள இரகசியங்களை ஆராயச் சற்று முற்படுவோம்.

## I. இளமையில் நுகம் சுமப்பது நல்லது - ஏன்?

தன் வாலிபத்தில் இடிமுழக்கத்தின் குமாரனென்று புனைப்பெயர் பெற்ற அப்போஸ்தலனாகிய யோவான் தன் நிருபத்தில் ***"வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும் தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்"*** *(1.யோவான். 2:14)* எனத் தூயஆவியானவரைக் கொண்டு யாத்துக் கொடுத்திருக்கிறார். வாலிபர்களின் பண்புகளைக் குறித்து பட்டியலிடும் யோவான் அவர்கள் பலவான்களென்றும், வெற்றிவாகை சூட ஆர்வமிக்கோர் என்றும் வாழ்வில் அரங்கேறும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் தங்கள் மனதில் தேக்கி நிறுத்தும் பண்புடையவர்களென்றும் எழுதுகிறார்.

தன் நற்செய்தி நூலில் இயேசுவின் தெய்வீகத்தை மையப்பொருளாக கொண்டு எழுதிய யோவான் இயம்புகிற இளமையின் முதல் குணத்தை உற்று நோக்கினால், இளைஞர்கள் *பலம்மிக்கோர்* என்று சித்தரிப்பதைக் காணமுடியும். பூமிக்குரிய வாழ்விலும், அதிலும் மேலான ஆவிக்குரிய வாழ்விலும், தங்களை அழிக்க, வஞ்சக வலை வீசி, இறைவனின் தானமான அழகைக் கொடுமையின்

கருவியாகக் கொண்டு கசக்கிப் பிழிந்து, வாலிபரின் மரியாதையையும் மானத்தையும் மண்ணெனப் பிறர் கருத வேண்டும் என செருக்குடன் சுற்றிதிரியும் கெர்ச்சிக்கும் அரியை எதிர்த்து அரிய போர் புரிய இளைஞர்கள் வல்லவர்கள் என எழுதுகிறார். ஆகவேதான், வயது சென்று பலமிழந்த பின் சுமை சுமப்பதைவிட பெலத்தை உறைவிடமாகக் கொண்ட வாலிப வயதிலேயே ஒருவன் சுமைகளைக் சுமப்பது நல்லது என விவிலியம் விளம்புகிறது.

ஆற்றல், பலம் என்ற அரண்களை நாம் அமைத்தாலும், பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சந்திக்கும் எதிர்ப்புகளை தவிடுபொடி ஆக்க வேத வசனத்தின் அறிவெனும் வாளேந்த வேண்டியது அவசியம். அதினால் தான் யோவான் ***தேவ வசனம் உங்களின் நிலைத்திருக்கிறதினால்*** என்ற அவசியத்தை கோடிட்டு காட்டுகிறார்.இளைஞர்கள் நல்ல கருத்துகளை காண்கையில் அதைக் கண் வழியாய்க் கருத்தறையில் நிறுத்தினார்கள் என்றால், அது வடிந்தோடும் வாய்க்கால் நீர்போல் இராமல், அவர்தம் நன்மதியில் பதிந்துவிடும். இளைஞனாகிய தாவீது ***"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்"*** (சங்.119:11) என இக்கருத்திற்கு வலுசேர்க்கிறார். பாவம் செய்யாதிருக்க, வேத வசனங்களை மனதில் நிறுத்தவேண்டிய அவசியம் இருப்பதால் ஞாபக சக்தி மிகுந்த இந்த பருவத்திலேயே சுமைகளைச் சுமப்பது நல்லது என வேதம் பறைசாற்றுகிறது.

புதிய ஏற்பாட்டின் இறுதி நூலாகிய வெளிப்படுத்தின விசேஷத்தில் ஜெயங்கொள்ளுகிறவனுக்கு என்று பல வெற்றிக் கனிகள் உண்டு என்று கூறுகிறது (2:11, 17,26, 3:5,12,21) இக்கனிகளை சுதந்தரிக்க ஆற்றல் என்னும் அரணும் வேத வசனத்தின் அறிவெனும் வாளும், உழைப்பெனும் புரவியும் ஏறிப்போரிட வேண்டிய அவசியம் இருக்கிறது. பொல்லாங்களை ஜெயிக்கக் கூடிய இவைகளைப் பெற்ற வாலிபர்கள், தாங்கள் கிறிஸ்துவுக்குள் படும் பிரயாசம் வீணாய் போகாது என்றறிந்து (1.கொரி.15:58) இந்த வாலிப பிராயத்திலேயே சிருஷ்டிகரை நினைக்கிறவர்களாய், ஆவிக்குரிய வாழ்க்கையில் சுமைகள் பல ஏற்று அவைகளை ஜெயங்கொள்ள அதிக வாய்ப்பு இருப்பதால் தான் பரிசுத்த ஆவியானவர் எரேமியாவைக் கொண்டு, இளமையில் நுகம் சுமப்பது நல்லது என இயம்பி இருக்கிறார்.

வாலிபர்களாகிய, நாம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சினையையும் கண்டு துவண்டு விடாமல், சூதகனின் சூழ்ச்சியின் காரணமாக, சிறு சந்தேகம் கொண்டு, கர்த்தர் கைவிட்டுவிட்டாரே என கிஞ்சிதமும் சஞ்சலமில்லாமல், அறுதியாக கர்த்தருக்கு காத்திருப்பதால் (புலம்பல்.3:26) நிச்சயமாய் ***ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார்*** (புலம்பல் 3:31) என்பது திண்ணம்.

## II. இயேசுவின் அழைப்பும் இதுவே

வார்த்தையாக ஆதியிலே இருந்தவர், இறைக்கு இணை என்ற இடம் விடுத்து, இகத்தின் இன்னல்கள் நீக்க, இடையருக்கும் இனிய செய்தியளிப்போராய் வரலாற்று நடுநாயகமாக ஜகத்தினில் அவதரித்த இயேசு, வலியோர் சிலர் எளியோர் மேல் சுமத்தும் பாரங்களைக் குறித்து வருத்தப்பட்டு

கலங்கி நிற்போரை இளைப்பாற அழைக்கையில் ***"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்."*** (மத்.11:29) என இறைகூவல் விடுக்கிறார். பாரச்சுமையால், சோர்ந்து போய் தன்னிடம் அடைக்கலம் தேடி வருபவர்களின் வருத்தத்தைத் துடைக்கும் நமதாண்டவர், அவர்களிடம் இனி சுமையே இல்லை இனிதே இருங்கள் எனக் கூறாமல், மாறாக இப்புவியின் வாழ்விலும், ஆவிக்குரிய வாழ்விலும் சுமைகள் உண்டு, ஆனால் உங்களுக்குத் தேவையானது ஒன்றுதான் என்றறிந்து, என் இளைப்பாறுதலை இதயத்தில் இருத்திக் கற்றுக்கொண்டால், எத்துணை இன்னல்கள் வந்தாலும் நீங்கள் இடறுவதில்லை என்கிறார். அது மாத்திரமல்ல நுகத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என அழைக்கும் அவர் ***"என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது"*** என்ற ஆறுதலையும் தருகிறார். *(மத்.11:30, 1.யோவான் 4:3).*

யாக்கோபின் அலாதி அன்பிற்கு பாத்திரமான ராகேலிடம் பிறந்த யோசேப்பு, உரிய காரணமில்லாமல் வெறுக்கப்பட்டு, விற்கப்பட்டு, இனமறியாத இடத்திற்கு கடத்தப்பட்ட போதிலும், தேவன் மீது அன்புள்ளவனாய் வழியே வந்த உலக சிற்றின்பத்தையும் ***"சீ "***என உதறி தன் மீது சுமத்தப்பட்ட சுமையை சுகமாய் எண்ணி பாரத்தைத் தாங்க பரத்தின் பலம் வேண்டி இருந்ததால், எகிப்திலும் மங்கையின் மதியற்ற எதேச்சதிக்காரத்தை அடித்து நொறுக்கி அரியணைக்கு அடுத்தப்படியான அதிகாரியாக தேவனால் உயர்த்தப்பட்டான். *(ஆதி.37முதல் 50வரை)*

யாக்கோபின் குமாரன் இந்த ரகம் என்றால் அவனின் அண்ணன் ஏசா, பசியால் வாடி, மரித்துவிடுவேன் என சோகராகம் பாடி, முதல் குமாரனுக்கு, தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்பாகிய சேஷ்டபுத்திரபாகத்தை பாரச் சுமை எனக்கருதி ஒருவேளை உணவுக்காய் அதை விற்றுப்போட்டான். விளைவு ***".... பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும் மனம்மாறுதலைக் காணாமற்போனான்."*** (எபி.12:17)என்கிறது வேதம்.

ஆகவே, எனக்கன்பான வாலிபர்களே! இயேசுவின் அழைப்பை ஏற்ற பவுல் தன் உத்தம குமாரனுக்குச் சொன்னதுபோல் சுவிசேஷத்தின் நோக்கத்திற்காக தீங்கநுபவித்தோமானாலும் *(2.தீமோ.1:8)*, நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்பதை மறவாமல் *(1.பேதுரு.4:16)*, நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்யப்போனவர், நம்மை திக்கற்றவர்களாக விடாமல் மீண்டும் வருவார், என்பதை அறிந்து *(யோவான்.14:18)* ***"அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது கிருபையின்படி இரங்குவார்"*** *(புலம்.3:32)* என்பது சத்தியமாதலால் இறுதிவரை, நம்மேல் அவர் வைத்த நுகத்தைச் சுமப்போம், வெற்றி வாகை சூடுவோம். இக்காரியத்தில் பரலோகத்தின் தேவன் தாமே உங்களோடு கூட இருப்பாராக!ஆமென்! ✝

ஜே. பிக்கின்ஸ்

# உபாகமம் ஒரு கண்ணோட்டம்

**I.** பொருள் : நியாயப்பிரமாணம் மீண்டும் சொல்லப்படுதலைக் குறிக்கிறது.

**II.** ஆசிரியர் : மோசே

**III.** காலம் : ஏறக்குறைய கி.மு. 1400

**IV.** முக்கிய வார்த்தை : செய்யாதிருப்பாயாக

**V.** எழுதப்பட்ட நோக்கம் : எகிப்திலிருந்து வெளிவந்த இஸ்ரவேல் ஜனங்களின் ஒரு சந்ததி மரித்தல் போய் மறு சந்ததி எழுந்ததினால், அவர்களுக்கு தேவன் கொடுத்த நியாயபிரமாணத்தை மறுபடியும் எடுத்துச் சொல்லும்படியாக எழுதப்பட்டது.

**VI.** இதுதரும் பாடம்:

தேவனையல்லாமல், நம்பிக்கைகுரிய வேறே வழிகாட்டி நமக்கில்லை.

**VII.** பிற தகவல்கள்

A. இஸ்ரவேலர்கள், எகிப்தின் அடிமைதனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, யெகோவா தேவனுடன் சீனாய் மலையில் உடன்படிக்கை உறவுகொண்டார்கள்.

1. கானான் தேசத்து எல்லைக்கு வந்து சேர்ந்த போது அவிசுவாசத்தால் அதற்குள் செல்ல மறுத்தார்கள்.
2. அடுத்த 38-ஆண்டு கால வனாந்திர யாத்திரையில் பழைய சந்ததி மரித்துப் போனதால் புதிய இஸ்ரவேல் வாக்குத் தத்த தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருந்தது.
3. ஆகவே, மோசே சில காரியங்களை செய்ய வேண்டியிருந்தது.

a. அந்த புதிய ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை சொல்லுவது.

b. நிரந்தர குடியிருப்பில் அதை நடமுறைப்படுத்த வலியுறுத்துவது

c. உடன்படிக்கையை புதுப்பிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்துவது

d. யேகோவா தேவனுக்கு உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ள மக்களாக இருக்க ஊக்கப்படுத்துவது.

# வெளிப்படுத்தின விசேஷம்

**அதிகாரம்: ஐந்து**

வெளிப்படுத்தல் நான்காம் அதிகாரம்,பிதாவைப் பற்றிப் பிரதானமாக இருக்கும்போது, வெளிப்படுத்தல் ஐந்தாம் அதிகாரம் இயேசுக்கிறிஸ்து பற்றிப் பிரதானமாக உள்ளது. வசனம் 1-ல், யோவான் கண்டவைகளையும், கேட்டவைகளையும் தான் எழுதுகிறார் என்பதற்கான மாதிரியின், இன்னுமொரு உதாரணத்தைப் பார்க்கிறோம். இவ்வசனத்தில், தேவன், தனது வலதுகையில், ஒரு புத்தகத்தைப் பிடித்துக்கொண்டு, உட்கார்ந்திருக்கிறார். இப்புத்தககம் வழக்கத்திற்கு மாறான ஒரு தோற்றமுடையதாக, உள்ளும், புறம்பும், எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால், முத்திரிக்கப்பட்டிருந்தது. இரண்டாம் வசனத்தில், ஒரு பலமுள்ள தூதன் (தூதனுடைய அடையாளம் வெளிப்படுத்தப்படவில்லை) மிகுந்த சத்தமாய் புத்தகத்தை திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார்? என்று கூறினான். வசனம்-3ல் இந்தக் கேள்விக்கான பதிலைக் காணலாம்.வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புத்தகத்தைத் திறக்கவும் அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது. இந்த வசனத்திற்கான,தமிழ் மொழி பெயர்ப்பு, மூல மொழியாகிய கிரேக்கத்தோடு ஒத்து வருகிறது. இவ்வசனம்***ஒருவனும்*** என்று சொல்கிறது. வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது (ஒருவேளை மரித்து, அடக்கம்பண்ணப்பட்டவர்களை இது குறிக்கலாம்) இப்புத்தகத்தைத் திறக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. தன்னுடைய பாவங்களினிமித்தமாக *(ரோமர் 3:23)* மனிதன் இதற்குக் கண்டிப்பாகத் த்குதியானவனல்ல. தூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டவர்களானபடியால் *(எபி.1:7)* அவர்கள் கிறிஸ்துவுக்குச் சமமானவர்கள் அல்ல. அதுமாத்திரமல்ல, இயேசுவைப்போல மாம்ச வாழ்க்கையின் சோதனைகளை அறிந்தவர்களல்ல *(எபி.2:14-18)* இயேசு நம்மைப் போலவே, எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார். இருப்பினும் அவரிடம் பாவமில்லை.*(எபி.4:15)*

தேவனுடைய வலது கரத்திலிருந்த புத்தகத்தை நோக்கிப்பார்க்கவும், திறந்து வாசிக்கவும், இயேசுவைத் தவிர ஒருவராலும் கூடாதிருந்தது.*(5:4)*. இதினிமித்தம் யோவான் மிகவும் அழுதான். யோவான், ஏன் அழுதான்? என்ற கேள்வி வருகிறது. யோவானின் இச்செயலை நாம் புரிந்து கொள்வதற்கு, ***இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை காண்பிக்கும்படி, யோவான் பரலோகத்திற்கு ஏறிவரும்படி அழைக்கப்பட்டான்*** என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். *(வெளி.4:1)* தேவனுடைய கரத்திலிருக்கிற இந்தப் புத்தகமானது,

பரலோகத்திற்கு ஏறி வந்து காணும்படியாக, யோவான் அழைக்கப்பட்டதற்கான, தெளிவான காரணமாயிருந்தது. யோவான் இந்த புத்தகம் திறக்கப்படுவதை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்தப் புத்தகம் திறக்கப்படமுடியாதபோது, அவனுடைய நம்பிக்கை ஏமாற்றத்திற்குள்ளானது. அவன் அழுவதற்கான காரணமாக அது இருந்தது. ஆனால் வசனம்-5ல் இருபத்து நான்கு மூப்பர்களில் ஒருவன், சில ஆறுதலான வார்த்தைகளை யோவானிடத்தில் பேசினான். அவன் யோவானிடத்தில்“*நீ அழ வேண்டாம்; இதோ யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புத்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்*”. இங்கே, இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய அறிமுகம் நமக்கு இருக்கிறது.

இயேசு இங்கே, ஒரு சிங்கமாகவும், ஆட்டுக்குட்டியாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறார். அவர் இரண்டுமாகவும் இருக்கிறார் என்பதே உண்மை. இயேசு, யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் வேருமானவர்.பூமியிலே, சரீரப்பிரகாரமாக தாவீதின் வம்சத்திலிருந்து வந்தவர். (*மத்.1:1-17,22:45-46;* ரோமர் *1:3-5*). இன்றைக்கு, இயேசு தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிற தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, அவருடைய சபையாகிய நித்திய ராஜ்ஜியத்தின் மீது ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். (*லூக்கா.1:31-33; மத்.16:18-19;* யோவான் *18-36-37; அப்.2:29-36;* எபே.*1:22-23,5:23;* கொலோ.*1:13,18*). இது மாத்திரமல்ல, இயேசுவானவர், தேவனை அறியாதவர்களையும், அவருக்கு கீழ்ப்படியாதவர்களையும், ஆக்கினைக்குள்ளாக்கும் படி,ஜீவாலித்து எரிகிற அக்கினியோடே மீண்டும் வருவார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டியது அவசியம். (*2.தெச.1:7-10*) மீண்டும் வந்த பிறகு உலகத்தை நியாயந்தீர்க்கும்படியாய், இயேசு ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். (*அப்.17:30*) ஆனால், இயேசு, யூதா கோத்திரத்துச் சிங்கம் என்று மாத்திரம் அழைக்கப்படாமல், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளார். தேவன், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து விடுதலையாக்கும் முன்பாக ஜனங்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் பலியிட்டு, அதின் இரத்தத்தை அவர்கள் வீட்டுக் கதவுகளின் மேல் தெளித்தார்கள்.(*யாத்.12*) கர்த்தர் அவர்களுடைய வீட்டைக்கடந்துபோனார். அப்பொழுது தெளிக்கப் பட்டிருந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தந்தது. கிறிஸ்துவானவர், எல்லா மனுக்குலத்துக்கும் என்ன செய்வார் என்பதற்கான நிழலாக இது இருந்தது. இயேசு பஸ்காவின் ஆட்டுக்குட்டியாக இருந்தார். அவருடைய இரத்தமானது, மனிதனுடைய பாவஅடிமைத்தனத்திற்காகவும்,அவனுக்கு நித்திய ஜீவனை அருளும்படியாகவும் சிந்தப்பட்டது. (*ஏசாயா.53:* யோ.*1:29,36; அப்.8:30-35; 1.*கொரி.*5:7; 1*பேது.*1:18-21*). உலக

*தோற்றத்திற்கு முன்பாகவே* இது தேவனுடைய திட்டமாக இருந்தது. (1.பேது.1:20) ஆகவேதான், இயேசுவானவர் ***உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி*** என்று அழைக்கப்பட்டுள்ளார். (வெளி.13:8). இயேசு, சிங்கமாகவும், ஆட்டுக்குட்டியாகவும் இருப்பது, ரோமர் 9:22ஐ நினைவுபடுத்துகிறது. தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும் தமது, வல்லமையைத் தெரிவிக்கவும், உலகத்தை இரட்சிக்கும்படியாக, இயேசு பூமிக்கு முதல்முறை ஆட்டுக்குட்டியாக வந்தார்: அவரை ஏற்றுக்கொள்ளாதவர்களை ஆக்கினைக்குள்ளாக்கும்படியாக, இயேசு இரண்டாம் முறை ஒரு சிங்கம்போல் வருவார்.

மூப்பர்களில் ஒருவன், யோவானிடம், புத்தகத்தைத் திறக்கும்படி ஜெயங்கொண்டிக்கிறார் என்று சொன்னபிறகு, ஆறாம் வசனம் ***அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி*** சிங்காசனத்திற்கும் நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன் என்று கூறுகிறது. ஆட்டுக்குட்டிக்கு ஏழு கொம்புகளும், ஏழு கண்களும் இருந்தது. அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுவானவர், ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கப்பட்டிருக்கிறார் என்பது நமக்கு தெரியும்.(அப்.2:36). இயேசு பூமியனைத்திற்கும் கர்த்தராயிருக்கிறார் (10:36). மனிதர்களுடைய ராஜ்யங்களில் பூமிக்குரிய தனது ஊழியர்களாகிய, அரசு அதிகாரிகளைக் கொண்டு, இருப்புக்கோலால் அவர்களை ஆளுகை செய்கிறார். (ரோமர்.13:1-8). இயேசு கிறிஸ்துவாயிருந்து, சபைக்குத் தலைமையாக, அதன்மீது ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் இயேசுவுக்கு உண்டு.(மத்.28:18). இந்த அதிகாரமானது, வெளி.5:6-ல் ஒரு ஆட்டுக்குட்டியின் தோற்றத்தோடு விவரிக்கப் பட்டிருக்கிறது. வசனம் 7-ல் ஆட்டுக்குட்டியாகிய இயேசுவானவர் வந்து, சிங்காசனத்தின்மேல், உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புத்தகத்தை வாங்கினார்.

வசனம்-8-ல் இயேசு அந்தப் புத்தகத்தை வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்தார்கள் என்று உள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த, பொற்கலசங்களையும் பிடித்திருந்தனர். இந்த வசனம், தேவனிடத்தில் நாம் அதிக ஊக்கத்தோடும், ஆர்வத்தோடும் ஜெபிப்பதற்கு நம்மை உற்சாகப்படுத்தும். பரிசுத்தவான்களுடைய ஜெபம், தமது சிங்காசனத்தில் வீற்றிருக்கிற தேவனிடத்தில் போய்ச் சேருகிறது. பரிசுத்தவான்களின் ஜெபங்கள் அவருக்கு சுகந்த வாசனையாக உள்ளது. இதைப் போன்றதொரு, விவரிப்பை வெளி.8:3-4 வசனப்பகுதியில் காணமுடியும். துன்மார்க்கருடைய ஜெபம்

பற்றி அங்கே இல்லையென்பதை நாம் காண்கிறோம். நீதிமான்களுடைய ஜெபத்தை மட்டுமே தேவன் கேட்கிறார். தங்கள் இருதயத்தில் பாவ சிந்தனையுள்ளவர்களின் ஜெபத்தை தேவன் கேட்பதில்லை. *(சங்.66:18 ஏசா.59:2; யாக்.5:16, 1பேதுரு 3:12; 1.யோவா.3:22)*. நம்மை சிருஷ்டித்தவரை நோக்கி அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாக நேரிடையாக ஜெபிக்க முடிவதும், அந்த ஜெபங்கள் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரிடத்தில் சேருகிறதென்பதும் எவ்வளவு சிறப்பானதொரு ஆசீர்வாதம் பாருங்கள். நமக்கு இருக்கிற, நமக்குத் தேவைப்படுகிற ஒரே மத்தியஸ்தர் இயேசுதான்.*(1.தீமோ.2:5)* நம்முடைய ஜெபங்கள் சுகந்த வாசனைப்போன்று, தேவனுக்குப் பிரியமாயிருக்கிறதென்பது நம்மை உற்சாகப்படுத்தவேண்டும்.நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து நமது விண்ணப்பங்களை அவருக்கு தெரியப்படுத்த வேண்டுமென்றும், இடைவிடாமல் ஜெபம் செய்யவேண்டுமென்றும் கேட்கிறார். *(பிலி.4:6; 1.தெச.5:7)*. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியமாகிய ஜெபத்தின் மேன்மையை உணராவிட்டால், நாம், நமக்கு நாமே தீங்கிழைத்துக் கொள்கிறவர்களாயிருப்போம்.

வெளி.5:8-ல் பரலோகத்தில் ***சுரமண்டல்ங்கள்*** உபயோகப்படுத்தப் பட்டிருப்பதை வைத்து சபையில் இசைக்கருவிகளை பயன்படுத்துவது நியாயமே என்று சிலர் வாதிடுகின்றனர். இந்த வாதம் நியாயமற்றது. முதலாவது, இசைக்கருவிகள் என்பது உலகப்பிரகாரமான பூமிக்குரிய பொருள். அது அநித்தியமானது. *(2.கொரி.4:18)*. மாறாக,பரலோகம் என்பது நித்தியமானது. சரீரப்பிரகாரமாக ***காணப்படாத*** இடம். ஆகையால், பூமியில் நாம் காண்கிற எக்காளம், சுரமண்டலம், ஆர்கன் அல்லது இதுபோன்ற எந்தவொரு இசைக்கருவியோ பரலோகத்தில் இருக்க வாய்ப்பில்லை. உருவகமாக சொல்லப்பட்டிருக்கின்ற ஒன்றை நிஜப் பொருளில் எடுத்துக்கொள்ளக்கூடாது. இதையே வேறுவிதமாகச் சொன்னால், பரலோகத்தில் சுரமண்டலங்கள் உண்டென்று உருவகமாக விவரிக்கப் பட்டிருப்பது, எந்தவகையிலும், நாம் பூமியில் தேவனை ஆராதிக்கும் போது, நிஜமான இசைக்கருவிகளை உபயோகிப்பதற்கு அங்கீகாரமாகாது. மேலுமாக, பரலோகத்தில், எதிர்காலத்தில் நடிக்கக்கூடிய ஒரு செயலை, நாம் இந்த பூமியில், சபையிலே செய்யக்கூடிய அதிகாரம் பெற்றிருக்கிறோம் என்று சொல்லமுடியாது. ஏனெனில், பரலோகத்திலே, எதிர்காலத்தில் அதுவும் குறிப்பாக, உருவக முறையில் நடக்கக்கூடும் என்று விவரிக்கப்பட்டிருக்கிற காரியங்களின் மூலம் நாம் ஆளுகை செய்யப்படாமல், புதிய ஏற்பாட்டினாலே தான் நாம் ஆளப்படுகிறோம். ஆராதனையிலே , சபையாகக் கூடிப்பாடுகின்ற ஒரு இசைதான் புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. *(எபே.5:19; கொலோ.3:16)*.

வசனங்கள் 9,10-ல் நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் புதிய பாட்டைப் பாடினார்கள். அந்தப் புதிய பாடல், ஆட்டுக்குட்டியானவர் (கிறிஸ்து) அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும், ஜனங்களிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று தம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டபடியால், அந்தப்புத்தகத்தை வாங்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராக இருக்கிறார் என்று சொல்லுகிறது. இயேசு இந்த எல்லா தேசத்தாருக்கும், கோத்திரத்தாருக்கும், ஜனங்களுக்கும், பாஷைக்காரருமாகவே மரித்தார். சுவிசேஷம் இவர்களெல்லாருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும். (வெளி.14:6) அவர்களெல்லாரும் பரலோகத்தில் காணப்பட்டு (வெளி.7:9) அங்கே தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவார்கள்.(வெளி.) புதிய ஏற்பாட்டில், விசுவாசத்தின் கதவுகளை, தேவன் புறஜாதிகளுக்கும் திறந்தார் என்பது, இன்னுமொரு விலைமிகுந்த ஆசீர்வாதம் (அப்.11:18;14:27). நாம் எந்ததேசத்திலிருந்து அல்லது இனத்திலிருந்து வருகிறோம் என்பதோ, என்ன மொழி பேசுகிறோம் என்பதோ, நம்முடைய தோலின் நிறம் என்ன என்பதோ, அல்லது எழை,பணக்காரன் என்பதோ ஒரு பிரச்சினையே அல்ல, தேவன் இந்த வெளிப்புற காரியங்களைப் பார்ப்பதில்லை. நம்முடைய இருதயத்தை மாத்திரமே அவர் பார்க்கிறார். (1.சாமு.16:7)*"அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்."* (அப்.10:34,35) என்கிறார். கிறிஸ்துவுக்குள் எல்லோருக்கும் சமமான நிலைதான் உள்ளது. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா.3:28) இது கிறிஸ்தவத்தின் வல்லமை மிகுந்த பெருமைக்குரிய ஒரு காரியமாகும். துரதிஷ்டவசமாக, ஜனங்கள் தேவனைப் போல், மற்றவர்களுக்கு தீர்ப்பளிக்காமல், அடிக்கடி தவறிழைத்து விடுகிறார்கள். (யோவா.7:24). நாம் மாம்சத்தின்படி தீர்ப்புச் செய்து, தோற்றத்தின்படி காரியங்களை அளவிட்டால், நாம் பாவ குற்றமுடையவர்களாகிவிடுவோம். நாம் அதற்காக தேவனால் நியாயந்தீர்க்கப்படுவோம். (யாக்.2:1-13). ஜாதிப்பிரிவினைகள் உட்பட, இந்த மாம்ச பேதங்களுக்கு தேவனிடத்தில் இடமில்லை. அவைகள் கிறிஸ்துவின் சபைக்கு உடன்பாடானதல்ல. நம் எல்லோரையும் மீட்கும்படியாக கிறிஸ்து மரித்தார் என்பதற்காகவும், தேவனைப்போல, மற்றவர்களை அதே அன்போடும் சமத்துவத்தோடும், நியாய உணர்வோடும் நாம் நடத்துவதற்கான வாய்ப்பை பெற்றமைக்காகவும் நன்றியுடையவர்களாயிருக்கவேண்டும்.

அந்தப் புதிய பாடல் இயேசு நம்மை தேவனுக்கேற்ற ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஆக்கியிருக்கிறார் என்றும் நாம் பூமியிலே ஆளுகை செய்வோம் என்றும் கூறுகிறது. இது, கிறிஸ்துவின் வருகைக்குப் பின் இயேசுவும், அவரை பின்பற்றுகிறவர்களும், பூமியிலுள்ள எருசலேமில், பூமிக்குரிய ராஜ்யத்தில் ஆயிரம் வருடம் அரசாளுவார்கள் என்ற ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கையோடு, ஒத்துபோவதில்லை. புதிய பாடலானது, இப்பொழுது ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருக்கிறார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது.(வெளி.1:5-6) ஆவிக்குரிய ராஜ்யமாகிய சபையில் நாம் பங்காக இருக்கிறோம். *(மத்.16:18-19; அப்.2:36-47, கொலோ.1:13; வெளி.1:9)* இயேசு ராஜாவாகவும் பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார்.*(சகரி.6:11-13; எபி.2:17;3:1;4:14-15)*. நாம் ஆவிக்குரிய பலிகளை தேவனுக்குச் செலுத்தும் ராஜரீக ஆசாரியக் கூட்டமாக இருந்து (1.பேதுரு 2:5-9) கிறிஸ்துவின் தலைமைக்கு கீழாக பணிபுரிகிறோம்.(எபே.1:22-23;5:23, கொலே.1:18) கிறிஸ்துவுடனான நம்முடைய ஆளுகை என்றென்றைக்கும் இருக்கும். (வெளி.22:5) நாம் உண்மையாகவே, ஒரு நித்திய ராஜ்யத்தின் பங்காக இருக்கிறோம். *(தானி.2:44-45, மத்.16:18-19)*.

வசனங்கள் 11,12-ல் யோவான், அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டான்,கண்டான். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும் (1கோடிக்குச் சமம்) ஆயிரம் ஆயிரமாகவும் (10 லட்சத்திற்குச் சமம்) இருந்தது. இந்த எண்ணிக்கைகள், பரலோகத்தில் எண்ணிலடங்காத தூத சேனைகள் உண்டென்பதை விளக்குவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள உண்மையென்று வெளிப்படையாகத் தெரிகிறது. நான்கு ஜீவன்களையும், இருபத்து நான்கு மூப்பர்களையும் போலவே, இந்த தூதர்களும், ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார் என்று சொல்லிற்று. அவர்கள், மகா சத்தமிட்டு, அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும் மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். இயேசுவின் உயிர்த் தெழுதலுக்குப் பின், தேவன் கிறிஸ்துவை உயர்த்தி இவையெல்லா வற்றையும், அவர் அதற்கு உண்மையாகவே பாத்திரராயிருக்கிறபடியால் கொடுத்தார் (பிலி.2:5, கொலோ.1:17-20) இந்தத் திரள் கூட்டமான தூதர்கள் தவிர, வசனம் 13-ல் வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழிருக்கிற சிருஷ்டிகள் யாவும் சமுத்திரத்திலுள்ளவைகளும், ஆட்டுக்குட்டியான வருக்கும், ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும், வல்லமையும், சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன் நியாயத்தீர்ப்பின் போது, துன்மார்க்கரும் கூட கர்த்தரை மகிமைப்படுத்துவார்கள் *(பிலி.2:9-11;ரோமர்.14:10-11, 1பேதுரு.2:12)*.

இறுதியாக, வசனம் 14ல், *"அந்த நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொல்லின. இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிக்கிறவரைத்தொழுது கொண்டார்கள்."* இந்த வசனமானது,நாம் இன்றைக்கு கிறிஸ்துவை நேரிடையாகத் தொழுது கொள்ளலாம் என்று அங்கீரிப்பதில்லை. இயேசு பணிந்துகொள்ளப்பட்டார் அல்லது தொழுதுகொள்ளப்பட்டார் அல்லது நேரிடையாகப்பேசப்பட்டார் என்ற சந்தர்ப்பகளெல்லாம் (அப்.7:56,59,60; 9:5-6;22:17-21). யாராவது ஒருவன், அவர் சரீரத்திலிருந்தபோது அவர் முன் நிற்கும்போது தான் நடந்துள்ளது. (மத்.2:11; 8:2;9:18;14:33;15:25;20:20;28:9;28:17, மாற்கு 5:6; லூக்.24:52; யோவான் 9:38). அவர் சரீரத்திலிருக்கும் சந்தர்பங்கள் நீங்கலாக, நாம் கிறிஸ்துவின் மூலமாக (யோவான் 14:6,13,14; 16:23,24). தேவனைநோக்கி (யோவான் 16:23) ஜெபிக்கும்படியாகவே நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறபடியினால், பிதாவை மாத்திரமே தொழுதுக்கொள்ள நமக்கு அதிகாரமுண்டு. (யோவான் 4:21-24;பிலி:3:3; வெளி.14:7; 19:10;22:9). பரலோகத்தில் கிறிஸ்துவானவரின் முன் காரியங்கள் ஒருவேளை வித்தியாசமான முறையில் இருக்கலாம். ஆனால் பரலோகத்தில் ஒரு காரியம் இப்படியிருக்கிறதென்று நாம் வாசிப்பது, அதை நாம் இந்த பூமியில் இன்றைக்குச் செய்யலாம் என்பதற்கான அங்கீகாரமாகாது.

**Jon Macon** **EZSR**

# நீங்கள் ஆவிக்குரியவரா?

*அப்படியானால், இந்த அடிப்படைப் பண்புகள் சில உங்களிடம் இருக்கிறதா?*

1. ஓர் ஆவிக்குரிய மனிதன் தேவன் இருக்கிறார் என்பதை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி விசுவாசிப்பான். அது மாத்திரமல்ல, தன் வாழ்வின் மீது, கர்த்தர் மேலான அதிகாரம் கொண்டிருக்கிறார் என்பதையும் நம்புவான்.(சங்.100:3; ரோமர்.9:21) மற்றும், தன்னைப் படைத்தவரோடு, ஒரு நெருங்கிய உறவை வளர்த்துக்கொள்ளும் வாஞ்சையுடையவனாக இருப்பான். அப்போஸ்தலன் பவுல், தேவன் பற்றி, *"என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவரும் என்று சொல்லுகிறான்."* (அப்.27:23).

2. ஆவிக்குரிய மனிதன் தன்னுடைய வாழ்க்கையை எப்படி நடத்துவதென்று ஞானம் தனக்கு இயல்பாகவே இருக்கவில்லையென்பதை ஒத்துக்கொள்ளுவான். (எரேமி.10:23)ஆகையால், தான் நடக்க வேண்டிய வழிக்காக, தேவ சிந்தையை பெற்றுக்கொள்ளும்படி விரும்புவான். தேவனுடைய வழிகளைக் குறித்து இரவும், பகலும் தியானிக்கிறவனாக இருப்பான்.(சங்.1:2)

3. ஓர் ஆவிக்குரிய மனிதன், தேவனுக்கு எப்பொழுதும் தன்னைக் கீழ்ப்படுத்தும்படியான, ஒப்புக்கொடுக்கும் ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பான். எஸ்றா, *"கர்த்தருடைய வேதத்ததைஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தினான்."* (எஸ்றா.7:10)

ஒரு ஆவிக்குரிய மனிதன் எஸ்றாவைப் போல தன்னைப்பக்குவப் படுத்துவான். ஒருவன் தன் இருதயத்தைச் சரிப்படுத்தினால், மற்ற எல்லாம் சரியாகிவிடும்.

4. ஓர் ஆவிக்குரிய மனிதன், தன் வாழ்வின் காரியங்களை நித்திய வாழ்வுக்கான கண்ணோட்டத்துடன் அணுகுவான். ஒருவேளை உபத்திரவங்களையும், பாடுகளையும், இப்பூமியின் வாழ்க்கையில் அனுபவித்தாலும், ***"இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல"*** (ரோமர்.8:18) என்பதை முற்றிலும் அறிந்தவனாக இருப்பான்.

5. ஓர் ஆவிக்குரிய மனிதன், எப்பொழுதும் ***"பூமிக்குரியவைகளை யல்ல, மேலானவைகளையே நாடுகிறவனாக இருப்பான்"*** (கொலோ.3:2) எப்பொழுதும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்த காரியங்களுக்கு முதலிடம் கொடுப்பான். (மத்.6:33) தன்னுடைய வாழ்வின் தேவைகளுக்காக தேவனையே முற்றிலும் சார்ந்திருப்பான்.

6. ஓர் ஆவிக்குரிய மனிதன் தேவனுக்காகச் செய்யப்பட வேண்டிய காரியங்களை, வகைப்படுத்தி, ***எதைச் செய்யலாம், எதை விட்டுவிடலாம்*** என்று பிரித்துப்பார்க்கமாட்டான். ஏசாயாவின் நாட்களில் இஸ்ரவேலர் திரளான பலிகளை தேவனுடைய ஆலயத்தில் கொண்டு வந்தார்கள். அதேநேரத்தில், ஒடுக்கப்பட்ட திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் புறக்கணித்தார்கள். (ஏசாயா.1:10-17) இயேசுவின் நாட்களிலும் பரிசேயர்கள் ***"....ஒற்றதலாமிலும், வெந்தையத்திலும், சீரகத்திலும், தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷத்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டார்கள்...."*** (மத்.23:23) ஆனால், கீழ்ப்படியும்படியாக சில காரியங்களைத் தெரிந்து கொள்ளவும், மற்றவைகளை புறக்கணிக்கவும் தேவன் ஒருபோதும் அனுமதியளிக்கவில்லை. **Selected**

## நினிவே பட்டணத்தைக் குறித்து

இப்பொழுது உள்ள ஈராக் தேசத்தில் வற்றாது, கரைபுரண்டோடும் நதிகளில் ஒன்றான டைகிரிஸ் நதியண்டையில் இப்பட்டணம் அமைந்ததால், இயற்கையின் செழுமை மிகுந்த பட்டணமாக நினிவே திகழ்ந்தது. இப்பட்டணத்தின் பாதுகாப்புக்காக, அரணான மதில் சுவர் 100 அடி உயரத்திற்கு நகரத்தை சுற்றிலும் எழுதப்பட்டிருந்தது. இம்மதிற்சுவரின் மேல்மட்டத்தில் மூன்று இரதங்கள் ஒரே சமயத்தில் நேர்வரிசையாக சிரமமின்றி ரம்யமாய் சீரிச்செல்லமுடியும். இந்த மதில் சுவரின் மேலே இன்னும் 100 அடி உயரத்திற்கு கண்காணிப்பு கோபரங்கள் சிலவும் இருந்தது. இவ்வளவும் போதாதென்று கோட்டையைச் சுற்றி 150அடி அகலமும், 60 அடி அழமும் உடைய பெரிய அகழியையும் வெட்டி இருந்தனார் இந்த நினிவே பட்டணத்தார். வல்லரசுகளில் ஒன்றான அசீரியா ராஜ்யத்திற்கு இது தலை நகரமாயிருந்தது. நினிவே பட்டணத்தை பிற்காலத்தில் மேற்கொண்ட பாபிலோன் நகரத்திலிருந்து சுமார் 280 மைல் தொலைவில் இது இருந்தது.

நினிவேயைச் சுற்றி மதிலின் தெற்கு புறமான 100 அடி சுவர் சுமார் 40 ஏக்கர் நிலத்தை நீலவாக்கில் கொண்டதாயிருக்கிறது. இந்த சுவருக்கு நெபி யுன்னிஸ் (Nebi Yunnis) என்று பெயர். இப்பெயருக்கு *யோனா தீர்க்கன* என்று பொருள். இதைப்போலவே வடக்கு புறமாக அமைந்த சுமார் 90 அடி உயரமுடைய சுவருக்கு கொயன்ஜிக் (Koyunjik) என்று பெயர். இப்பெயருக்கு ***நினிவேயின் அரண்மனைக்கோட்டை*** என்று பொருள்.

தெரிந்து கொள்ளுங்கள்

# உண்மைக் கிறிஸ்துவின் சபை ஒன்றே ஒன்றுதான்

தேவனைக் குறித்தோ, சத்தியத்தைக் குறித்தோ, நித்தியத்தைக் குறித்தோ ஆராயும் எந்த ஒரு தனி நபரும் குழப்பமடையக் காரணமுண்டு. இன்று கிறிஸ்தவம் துண்டாடப்பட்டிருப்பது ஏன்? சில சபைகள் சரியானதாகவும் சில சபைகள் தவறானதாகவும் இருக்கக்கூடுமா? அது ஏதாகிலும் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறதா?

## ஒருங்கிணைந்த சிலக் கருத்துக்கள்

கிறிஸ்தவ நோக்கத்தைக் கொண்டோர் எனத் தங்களை அழைத்துக் கொள்ளும் பெரும்பாலான நாமகரணக் கூட்ட அமைப்புகளும், பிரிவுகளும், தங்களையும் *ஒரு சபை* என்றே அழைத்துக் கொள்கின்றனர். அவர்களுக்குள் எத்தனையோ விதமான முரண்பட்ட கருத்துக்கள் இருந்தாலும் *சபை* எனும் பொதுவான பதத்தில் தான் இயங்குகின்றனர். இப்படியொரு கொள்கை அவர்களுக்கு எங்கிருந்து வந்தது? வேதாகமம் சபையை ஒருமையில் அறிமுகப்படுத்துகிறது. இச்சபை ஒரே ஐக்கியப்பட்ட அமைப்பு எனவும் தெளிவாக்குகிறது. இந்த தெய்வீக சபை தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டு, ஸ்தாபிதம் பெற்றிருப்பதாக வேதம் படம் பிடித்துக் காட்டுகிறது. எனவே, வேதப்புத்தகத்தை தான் இன்றைய சபையின் ஆளுகை அமைப்பிற்கும், ஆராதனையின் மாதிரிக்கும், உபதேசக்கோட்பாடுகளுக்கும் வழிகாட்டுகிற ஒரே அதிகாரம் கொண்டிருத்தல் அவசியமாகும்.

வானொலி, மற்றும் தொலைக்காட்சி வாயிலாக ஒலி பரப்பப்படும் ஒவ்வொரு ஞாயிற்றுகிழமை பிரசங்கங்களும், பாடல் மற்றும் ஜெபங்களும், மேலும் மேலும் சந்தேகத்திற்கு இடமளிக்கும் காட்சிகளாகவே காணுகின்றன. அவர்கள் பிரசங்கிக்கும் இரட்சிப்பின் திட்டங்கள் ஒன்றோடொன்று ஒத்துப்போவதில்லை. இவ்வியக்கங்கள் ஒரே மாதிரியான உபதேசத்தை பிரசங்கிப்பது போல் காணப்படலாம். ஆனால் அவர்களது பிரசங்கங்களும், போதனைகளும் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடுகளைக் கொண்ட எதிர் துருவங்களாகவே இருக்கும். ஒன்றுக்கொண்டு முரண்பாடாய் போதித்துக் கொண்டு தாங்கள் இரு கூட்டத்தாருமே உண்மையான சபையார் அல்லது சரியானவர்கள் என்று வாதிடுகையில், இரண்டுமே சரியானதாக இருக்க வாய்ப்பில்லை.

இப்பொழுது இருக்கிற மாறுபட்ட அநேக நாமகரணக் கூட்டங்கள், பெரும்பாலானோர் தங்களையும் *சபை* என அழைத்துக்கொள்வோர். ஒரு உண்மைச் சபை ஆதிமுதல் இருந்ததை ஏதோ ஒரு வகையில் சாட்சியிடுகின்றனர். கள்ள ரூபாய் நோட்டுகள் உண்மையான ரூபாய் நோட்டுக்கு சாட்சிதானே.

## வேதாகமம் கூறுவதென்ன?

சபையைக் குறித்து பதில் காணவேண்டிய ஒரே ஒரு இடம் உண்டு. அது தேவனுடைய வசனமாகிய வேதாகமம். அதுவே தேவனுடைய சபையைக் குறித்து எல்லாவற்றையும் கூறி, ஒரே ஒரு சபைதான் வேதாகமத்தின்படி உண்மையானது எனக் காட்டுகிறது. வேதா்கமத்தின் துவக்கத்திலிருந்தே தேவனுடைய ஒருமைப்பாடு வலியுறுத்தப்படுவதுடன், அதனைப் பின்பற்றுவோரின் ஐக்கியத்தையும் போதிக்கிறது. தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒற்றுமை ஆதியாகமம் 1:31-ல் வெளிப்படுத்தப்பட்டது. *"...அது மிகவும் நன்றாயிருந்தது."* தேவன் குழப்பத்திற்குத் தேவனல்ல. (1.கொரி.14:33) தேவன் விரும்பும் ஒருமை (ஒற்றுமை) யை போதிப்பதில் உபாகமம் 6:4ம் ஒரு வசனப்பகுதியாகும். ஆதியாகமம் 2:24-ல் விவாகத்தின் ஆரம்ப வரலாற்றை வெளிப்படுத்தி புருஷனும், ஸ்தீரியும் *"....ஒரே மாம்சமாயிருப்பார்கள்"* என்று அறிவுறுத்துகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தாம் ஏவப்பட்டபடி, புனிதமான (தெய்வீகமான) விவாக அமைப்பை கிறிஸ்துவிற்கும், அவரது சரீரமாகிய சபையின் தன்மைக்கும் உதாரணப் படுத்துகிறது.(எபே.1:22,23; கொலோ.1:18) சரீரத்தையும் புருஷன் மனைவியின் ஒற்றுமையையும் உருவகமாக்கி எபேசியர் 5-ம் அதிகாரத்தில் அநேக வசனங்களில் காட்டப்படுகிறது. கணவன் மனைவியின் உச்சகட்ட ஒப்புவமையைக் குறிப்பிட்டு பவுல், .... நான் சபையைக் குறித்தும் கிறிஸ்துவைக்குறித்தும் பேசுகிறேன் என்று கூறுகிறார். (எபே.5:32) *ஒரே சரீரம்.... ஒரே ஆவி.... ஒரே நம்பிக்கை... ஒரே கர்த்தர்.... ஒரே விசுவாசம்....ஒரே ஞானஸ்நானம்...ஒரே தேவன்...* என்று வேதம் கூறுகிறது.(எபே.4:4-6) இயேசு தமது ஜனங்களின் ஒற்றுமைக்காக ஜெபிக்கையில், *"அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்."* என்றார்.(யோவான்.17:21).

ஒரே சபையினை அடையாளப்படுத்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை சுருக்கமாகக் காண்போம். ஏசாயாவும், மீகாவும் (அவர்களின் எதிர்காலத்தில் வரவிருந்த) விசேஷித்த இராஜ்யத்தைக் குறித்துப்பேசி, அந்த இராஜ்யம் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் என்று விவரித்துப் பேசினார் (ஏசா.2:2,3; மீகா.4:1,2) இத் தீர்க்கதரிசனம் (சபையின்) ஸ்தாபித இடம் சீயோன் அல்லது எருசலேம் எனவும், அங்கிருந்து கர்த்தரின் வசனம் புறப்படும் (பிரசங்கிக்கப்படத்துவங்கும்) என்றும் கூறுகிறது. இயேசு தான் உலகில் வாழ்ந்த போது இருந்த சந்ததியாரின் காலத்திலேயே இராஜ்யம் பலத்தோடே வரும் என்று குறிப்பிட்டார்.(மாற்கு9:11) அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்ச்சியின் மேற்குறித்த அனைத்துத் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியிருப்பதையும், அந்நேரம் துவங்கி சபை ஸ்தாபிக்கப் பட்டிருப்பதாகவே புதிய ஏற்பாடு முழுவதும் பேசுகிறது. (அப்.2:46-47;20:28;1கொரி.16:19) மத்தேயு 16:18,19 அப்.20:25-28 லும் சபை இராஜ்ஜியம் ஆகிய இரண்டு பதங்களும் மாறி மாறி பேசப்படுகிறது. தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாவது நிருபம் (3:15) சபையை தேவனுடைய வீடு என்று கூறுகிறது.

சபைககுய தேவனுக்கும் உள்ள உறவுமுறையை யாரும் மறுக்க இயலாது. ஆகிலும் விசேஷமாக அதைக் கிறிஸ்துவின் சபை எனும் பொருளிலேயே பேசுகிறது. இயேசு"**.... என் சபையைக் கட்டுவேன் என்று சொன்னார்.**" (மத்.16:18) இங்கு குறிப்பிடப்படும் சபை எனும் பதம் ஒருமையில் கூறப்படுகிறது. அப்போஸ்தலர் 20:28-ல் கர்த்தர் தமது சுய இரத்தத்தினாலே (கிரயத்துக்கு கொண்ட) சம்பாதித்துக் கொண்ட சபை என்று கூறப்படுகிறது. மேலும் எபேசியர் 1:23-ல் சபை"**அவருடைய சரீரம்**" என்றழைக்கப்படுகிறது. எனவே சபையானது கிறிஸ்துவைத் தலையாகவும், கிறிஸ்தவர்களை அங்கங்களாக (அவையவங்களா)வும் கொண்ட, எல்லா உறுப்புகளையும் செயலாற்ற வைக்கிற உயிரோட்டமுள்ள ஒன்று.

எனவே நாமகரணமற்ற இந்த பூர்வீக சபை, சிலவேளைகளில் ஒரே மார்க்கமாகக் காட்டப்படுகிறது.(அப்.9:2) கிரேக்கமொழியில் சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள அடிப்படைப் பொருள் **அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்** என்பதாகும். புதிய ஏற்பாட்டில் உலகளாவிய அமைப்பில் ஒரே செய்தி மட்டுமே உண்டு என்ற நியதியிலும் காட்டுகிறது. அச்செய்தி"**பின்பு அவர் அவர்களை நோக்கி,நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்**" என்பதே. (மாற்கு.16:15,16) இந்த ஒரே சரீரத்தின் அல்லது மார்க்கத்தின் அங்கங்களெல்லாம், உலகெங்கிலும் சிதறி இருக்கின்றன. அப்படி ஆங்காங்கு பூகோள ரீதியாக கூடி ஆராதிக்கும் கூட்டத்தை பிராந்திய சபை என்றும் குறிப்பிடும் பொருளில், கிறிஸ்துவின் சபையார் என்று கூறப்படுகிறது. (ரோமர்.16:16)

## பிரிவினைகள் எப்படித் துவங்கியது?

புதிய ஏற்பாட்டின் எந்தவொரு இடத்திலும் ரோமன் கத்தோலிக்கம் என்றோ, எண்ணிறைந்த ப்ரொட்டஸ்டண்ட் கூட்ட பிரிவு சபைகளின் பெயர்களோ குறிப்பிடப்படவில்லை. அப்படியானால் இன்றுள்ள வித்தியாசப்பட்ட சபைகள் எப்படி உருவாயின? சபையானது எப்பொழுதும் தனிப்பட்ட மனிதர்களைக் கொண்டு அமைப்பைக் கொண்டது. எனவே மனிதர்களின் தவறுகளால் எளிதில் மாற்றம் பெறக்கூடியது. 1.கொரி.1:10-13-ல் கொரிந்து சபையை பவுல் எச்சரித்து, மனுஷர்களைப் பின்பற்ற வேண்டாம் நல்ல மனுஷர்களாயினும் அவர்களின் பெயரில் சபையைப்பின்பற்ற வேண்டாம்-கிறிஸ்துவுக்குப் பதிலாக யாரையுமே பின்பற்றவேண்டாம் என்று கூறுகிறார். அதே வசனப்பகுதியில் **கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?** என்று கேட்கிறார். அந்தக் கேள்வியின் உள்ளர்த்த பதில் **இல்லை** என்பதுதான். பிரிவினைகள் மனிதர்களாலும், அவர்களின் மாறுபட்ட கண்ணோட்டத்தாலும் உண்டாகிறது. விசேஷமாக நமக்குரிய

ஆதார அதிகாரமாக வேதாகமத்தை எடுத்துக் கொள்வதற்குப் பதில், மனிதர்களை நோக்கிப் பார்க்கும்போதுதான் பிரிவினைகளுக்கு வழிவகுக்கிறது.

உண்மையான சபையின் மாதிரியை மாற்றி, மனிதர்கள் வழுவிப் போனதின் விளைவால், ரோமன்கத்தோலிக்க முறை தோற்றமளித்தது. வசன ஆதாரமற்ற அவர்களின் செயல்பாடுகளில் சில, புனித நீர் பாவமன்னிப்புச் சீட்டு பெறுதல் அல்லது பாதிரியாரிடத்தில் பாவ அறிக்கை (பாவ சங்கீர்த்தனை) செய்தல் லத்தீன் மொழியில் தங்களின் தொழுகையை (மாஸ்) நடத்துதல், குழந்தை ஞானஸ்நானம் உத்தரிப்பு ஸ்தலக் கொள்கை முதலியன. இந்த சமயச் சடங்குகள் ஆதியிலிருந்த முதன் முதலில் தோன்றிய சபையிலிருந்தோ அப்போஸ்தலரிடமிருந்தோ வந்தவைகளல்ல. சபையின் ஆளுகை அமைப்பின் தான் மிகப்பெரிய அளவில் உண்மை சபையை விட்டுப் பிரிந்து போதல் நடந்தது. சில நூற்றாண்டுகளிலூடே பாரம்பரிய ரோமன் கத்தோலிக்க முறையிலான (சபைக்குள்) கீழ்மட்ட உயர்மட்ட அமைப்பு கொண்டதாக கி.பி.606-ல் தோன்றியது. வசனத்திற்குப் புறம்பான தலைமை (போப்)யைப் பெற்ற மூன்றாம் பானிப்பஸை கொண்டு துவக்கம் பெற்றது.

ப்ரொட்டஸ்டண்ட் இயக்கம் எதிர்ப்புகளின் மத்தியில் உருவாயிற்று. எந்த நாமகரண கூட்டமும் ஒரு பிரிவுக் கூட்டமே. ப்ரொட்டஸ்டண்ட் இயக்கத்தின் ஆரம்ப கால தலைவர்கள் எல்லாம், கத்தோலிக்கர்கள்; அவர்களில் பீட்டர் வால்டோ. மார்டீன் லூதர், அல்ரீச் ஸ்விங்கிலி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் நோக்கமெல்லாம் சபையை மறுமலர்ச்சியடையச் செய்வதுதான். ஆகிலும் அது மிகுந்த குழப்பங்களையும், தவறுகளையுமே புகுத்தக் காரணமாயிற்று. அந்த தலைவர்கள் கத்தோலிக்கத்தின் அமைப்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். ஆதலால் அவர்களின் பிரயாசங்கள் புதிய ஆளுகை அமைப்பிற்கு வழி வகுத்தது. இவைகள் எல்லாம் புதிய ஏற்பாட்டு சபைக்கு அப்பாற்பட்டு மிகவும் பின்னதாக (தாமதமாக) ஸ்தாபிதம் பெற்றவைகளும், மத்.16:18-ல் பேசுகிறவரால் அல்ல, யாரோ ஒருவரால் ஸ்தாபிதம் பெற்றவைகள் ப்ரொட்டஸ்டண்ட் போன்ற நாமகரணக் கூட்டங்களின் அநேக உபதேசங்களும், அனுஷ்டானங்களும், புதிய ஏற்பாட்டின் மாதிரிகளுக்கு மேல் கூட்டியோ அல்லது குறைத்தோ செயல்படுபவை, அவைகளின் பெரும்பாலான காரியங்கள் கத்தோலிக்கத்திலிருந்து வந்தவை. வருஷங்களினூடே இன்னும் அநேக நாமகரணங்கள் புதுப்புது உபதேசங்களுடன் தொடர்ந்து உண்டாயின.

## நாம் கிறிஸ்துவின் சபையில் இருப்பது அவசியம்.


ஒருவர் தான் விரும்பும் ஒரு *சபையை* தேர்ந்தெடுப்பதில் உள்ள தவறு என்ன? பகுத்தறிவைப் பெற்றுள்ள நாம் தெரிந்தெடுக்கும் திறன்

பெற்றவர்கள்தான்.ஆகிலும் நமது *தெரிவு* தவறானதாக இருக்கலாம். சபையை பொறுத்த மட்டில், கிறிஸ்து அதைக் கட்டினார், கிரயத்திற்குப் பெற்றார். அவரே அதற்குத் தலையாகவுமிருக்கிறார். அவர் கூறும் விதிமுறைகளை ஏற்று அவருடைய அழைப்புக்கு செவி சாய்ப்பவர்களை, அவரது சபையில் சேர்த்துக்கொள்கிறார்.(அப்2:47). அப்போஸ்தலர் 2:47-ல் "***இரட்சிக்கப்பட்ட வர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொண்டார்***" என்று சொல்கிறது "***...அவருக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்புக்காரணராக***" அவர் இருக்கிறார். (எபி.5:9) அவரே அவருடைய சரீரமாகிய சபைக்கு இரட்சகருமாக இருக்கிறார்.(எபி.5:23) நீதிமொழிகள்.14:12-ல் "***மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு, அதின் முடிவோ மரண வழிகள்.***" என்று எச்சரிக்கிறது. கர்த்தருடைய நாமத்தை அறிக்கையிட்டு, அவருடைய நாமத்திலே அடையாள அற்புதங்களைச் செய்தவர்களும் கூட இழந்தவர்களாவர் என்று இயேசு சொன்னார். பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகத்தில் பிரவேசிப்பான் என்றும் அவர் சொன்னார். (மத்.7:21-23) ஒரு மனிதனுடைய உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் நீதிமன்றத்தில் மிகவும் கண்டிப்புடன் கனப்படுத்தப்படும். இறுதி நியாயத்தீர்ப்பிற்கும் நித்திய ஜீவனுக்கும் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிற நாம், கிறிஸ்துவின் சபையில் (புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகிற அந்த ஒரே சபையில்) அங்கத்தினராயிருக்கிறோமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் அவசியம். அவருடைய சித்தத்தைச் செய்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்படிய வேண்டும். இதன் அடிப்படையில் தான் நாம் இரட்சிக்கப் படுவோம். (யோவான்.12:48).

**தமிழில்: E.A. ஆறுமுகம்**

## உயிர்த்தெழுந்தபின் இயேசுவைக் கண்டவர்கள்

| | | |
|---|---|---|
| மகதலேனா மரியாள் | - | யோ.20:1,11-18 |
| மற்றுமொரு மரியாள் | - | மத்தேயு 28:1-10 |
| எம்மாவூர் சாலையிலே.. | - | லூக்கா 24 : 13 |
| பேதுரு | - | லூக்கா 24:34 |
| பத்து அப்போஸ்தலர்கள் | - | யோவான் 20 : 19-24 |
| பதினோறு பேர் | - | யோவான் 20:26-29 |
| திபேரியா கடல் அருகே 7 பேர் | - | யோவான் 21:1 |
| ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் | - | 1.கொரி.15:6 |
| யாக்கோபு | - | 1.கொரி.15:7 |
| பரமேறுவதற்குச் சற்றுமுன் அப்போஸ்தலருக்குக் காட்சி தந்தார் | - | மாற்கு 14:14-17 |
| கடைசியாக பவுலுக்கு | - | 1.கொரி.15:8 |



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.**

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**இயக்குநர்,**

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
**த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.**

வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**